வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 19.11.2022 சனிக்கிழமை | இதழ் : 346 | பக்கங்கள் : 16

## யாழ். பல்கலையின் இந்து மத பீடத்துக்கு வருடம் 100 மாணவர்!

கொழும்பு, நவ. 19

யாழ். பல்கலைக்கழகத்தின் இந்து பீடத்துக்கு தேவையான நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டு வருடந்தோறும் சுமார் 100 மாணவர்களை உள்வாங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா - துறைசார் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த இடையே நடந்த கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்து நாகரிகம், சமஸ்கிருதம் மற்றும் சைவ சித்தாந்தம் ஆகிய கற்கைநெறிகளை கொண்ட தனித்துவமான பீடமாக கடந்த 2019ஆம் ஆண்டு இந்து பீடம் உருவாக்கப்பட்டபோதிலும், தேவையான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படாத நிலையிலேயே தற்போது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




### கொழும்பில் போராட்டங்கள்:

# கண்ணீர்குண்டுகளை வீசி கலைத்தனர் பொலிஸார்!

கொழும்பு, நவ. 19

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றயத்தினர் நேற்று கொழும்பில் பல இடங்களில் போராட்டங்களை நடத்தினர். இந்தப் போராட்டங்களை தண்ணீர் தாரை பிரயோகம் செய்தும், கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் பொலிஸார் கலைத்தனர். ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் வசந்த முதலிகே, மற்றும் சிறீ தம்ம தேரர் ஆகியோர்

15

## கடலுக்கு செல்லாதீர்கள் மீனவர்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, நவ. 19

வங்காள விரிகுடாவின் தென்கிழக்கு பிரதேசத்தில் இன்று சனிக்கிழமை முதல் நாளை மறுதினம் வரை கடற்றொழிலுக்கு செல்வதை தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மீனவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இந்தப் பகுதியில் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மீனவர்களை உடனடியாக கரைக்குத் திரும்புமாறு அல்லது பாது

15

### கிளிநொச்சி பாடசாலையில் திடீர் சோதனை:

# போதைப் பொருட்களுடன் 10 மாணவர்கள் சிக்கினர்!

கிளிநொச்சி, நவம்பர் 19

**கிளிநொச்சி மாவட்டத்தின் பாடசாலை ஒன்றில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் 10 மாணவர்கள் போதைப் பொருட்களுடன் பிடிபட்டனர்.**

நேற்றைய தினம் கிளிநொச்சி புறநகரிலுள்ள பாடசாலை ஒன்றில் விழிப்புணர்வு நடவடிக்கையாக பாடசாலை நிர்வாகம், பிரதேச பொது அமைப்புகள் இணைந்து விழிப்புணர்வு நடவடிக்கையை முன்னெடுத்தன. இதன்போது, 10 மாணவர் களின் புத்தகப் பைகளில் இருந்து போதைப் பொருட்கள் கைப்பற் றப்பட்டன. இந்தப் போதைப் பொருட்களை வைத்திருந்தவர்கள் 15 வயதுடையோராவார்.

பிடிபட்ட மாணவர்கள் அனைவரும் கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)



## நல்லூரில் ‘கார்த்திகை வாசம்’ மலர்க் கண்காட்சி ஆரம்பம்!

யாழ்ப்பாணம், நவ. 19

வட மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு ‘கார்த்திகை வாசம்’ என்ற மலர்க் கண்காட்சி நேற்று நல்லூர் சங்கிலியன் பூங்காவில் ஆரம்பமானது.

இந்த மலர்க் கண்காட்சியை எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி வரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரை

15

## வடமராட்சி மீனவரின் படகை மோதியது இந்திய ட்றோலர்!

### வலைகளையும் அறுத்து சேதம்

வடமராட்சி, நவ. 19

வல்வெட்டித்துறையில் இந்திய மீனவர்களின் ட்றோலர் படகு மோதியதில் படகு ஒன்று சேதமடைந்தது. அத்துடன், வலைகளும் அறுக்கப்பட்டன.

நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

வல்வெட்டித்துறை கரையில் இருந்து நான்கு கடல் மைல் தூரம் வரை அதிகளவான இந்திய ட்றோலர் படகுகள் அத்துமீறி நுழைந்தன. இதன்போது இலங்கை மீனவரின் படகு ஒன்று மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது வல்வெட்டித்துறை, ஆதி

15

## மனித கடத்தல்காரர்களை கைது செய்ய நடவடிக்கை!



கொழும்பு, நவம்பர் 19

நாடு முழுவதும் நடைபெறும் ஆள் கடத்தல்களை தடுக்க விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மனித கடத்தல்களில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுவர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ

15

## இப்படியும் நடக்கிறது...!

எகிப்தில் இருந்து நாடு திரும்பியதும் பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கின் பிரச்னைகளுக்கு எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வு காணப்போவதாகவும் அதற்காக வடக்கின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அடுத்த வாரமே பேசப்போவதாகவும் அறிவித்திருந்தார்.

அவர் தனது பேச்சில் தமிழர் பிரச்னை என்றோ அல்லது இனப் பிரச்னை என்றோ அதிகம் ஏன் வடக்கு - கிழக்கு பிரச்னை என்றுகூட சொல்லவில்லை. அவர் அப்போது சொன்னதெல்லாம் வடக்கு பிரச்னை என்பது மாத்திரமல்ல, அவை என்ன என்ன பிரச்னை என்றும் தெளிவாக குறிப்பிட்டிருந்தார்.

அதாவது கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், மற்றையது அவசியமான சில அபிவிருத்திகள் என்பவையே அவை. அவர் தெளிவாகவே இதுகுறித்து அறிவித்த பின்னரும் நமது தமிழ் அரசியல் கட்சிகளும் தலைவர்களும் அந்தப் பேச்சில் என்ன கோரிக்கையை முன்வைப்பது என்பது குறித்து ஒரே நிலைப்பாட்டை எடுப்பதற்காக கூட்டம்கூடுவதற்கு முண்டியடிக்கின்றனர்.

போதாக்குறைக்கு சமஷ்டிதான் நமது ஒரே கோரிக்கை என்பதையும் சொல்லிவைக்க விரும்புகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழர் பிரச்னைக்கு தீர்வு காண  அல்லது புதிய அரசமைப்பை கொண்டுவரப்போவதாக முன்னர் சொல்லியிருந்தாலும் இப்போது அவர் பேச அழைப்பது மேலே சொன்ன விடயங்கள் பற்றிப் பேசுவதற்காகவே என்றே தெரிகின்றது.

இவற்றை கவனிப்பதற்காகவே தனது செயலகத்தில் மேலதிக செயலர் தரத்துடன் ஓர் அதிகாரியை நியமித்து, பணிகளை தொடக்கியும் இருக்கிறார்.

ஜனாதிபதி அன்று பாராளுமன்றத்தில் அறிவித்ததுபோல ஏன் அடுத்த வாரம் (அதாவது இந்த வாரம்) வடக்கு எம். பிக்களை பேச்சுக்கு அழைக்கவில்லை என்று இப்போது பலரும் கேள்வி கேட்டு வருகின்றனர்.

வடக்கு அபிவிருத்தி - அல்லது வடக்கின் பிரச்னையைவிட அவருக்கு இப்போது இருக்கும் முக்கிய பிரச்னையே தான் சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டியதுதான்.

அமைச்சர் பதவி கேட்டு குடைச்சல் கொடுத்துக்கொண்டிருக்கும் மொட்டு கட்சி எம். பிக்கள், இந்தத் தருணத்தை தவறவிட்டால் பிறகு இன்னும் ஒரு வருடத்துக்கு தமது தேவை ஜனாதிபதிக்கு ஏற்படாது என்பதால் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அமைச்சர் கதிரைகளை பிடித்துவிட முயன்று கொண்டிருக்கின்றனர்.

இருபத்து இரண்டாவது அரசமைப்பு திருத்தத்தை நிறைவேற்றுவதற்காக தமது ஆதரவு தேவை என்ற நிலைமை இருந்தபோது இதனை காரணம் காட்டு தமது விருப்பப்படி முப்பதுக்கும் அதிகமான கட்சிக்காரர்களுக்கு இராஜாங்க அமைச்சர் பதவிகளை பெற்றதுபோல, இப்போது வரவு - செலவுத் திட்டவாக்கெடுப்புக்கு முன்னதாக அமைச்சர் கதிரையில் இருந்துவிட பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் காய் நகர்த்தி வருகின்றனர்.

இந்த விடயங்களை கையாள்வதற்காகவே கட்சியின் ‘மூளை’ என்று வர்ணிக்கப்படும் பஸில் ராஜபக்ஷவும் அமெரிக்காவிலிருந்து கொழும்பு திருப்பியிருக்கிறார் என்கின்றது அவருக்கு நெருங்கிய வட்டாரம் ஒன்று.

ஜனாதிபதியின் கவனம் எல்லாம் இப்போது அந்த ஒரு விடயத்திலேயே இருக்க அமெரிக்காவிலிருந்து பஸில் நகர்த்திவந்த காய்களை எப்படி எதிர்கொள்வது என்பதில் ஜனாதிபதி தரப்பு தீவிரமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றது.

பிரதான எதிர்க்கட்சி தலைவர் ஒருவருடன் பஸில் ராஜபக்ஷ பேசி வருவதன் பின்னணி அவர்கள் தரப்பு ஜனாதிபதியுடன் நெருக்கமாகிவிடக்கூடாது என்பதில் கவனம் செலுத்திவருகின்றதாம்.

அண்மையில், கொழும்பு பல்கலைக்கழகம் நாடு பூராகவும் நடத்திய கருத்துக்கணிப்பு ஒன்று பலரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்திருக்கின்றதாம். ஒரு சில மாகாணங்களில் சிவப்பு அணியினர் முதலிடத்தில் இருக்க மக்களின் நம்பிக்கையில் ரணில் இரண்டாமிடத்திலும் பிரதான எதிர்க்கட்சி மூன்றாமிடத்துக்கும் தள்ளப்பட்டிருக்கின்றதாம்.

கொழும்பு பல்கலைக்கழகம் கருத்துக்கணிப்பு நடத்துகின்றது என்றால் அது தனது மாணவர்களையே அதற்குப் பயன்படுத்தியிருக்கும் என்பது தெரிந்ததுதான். இன்று பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் சிவப்பு அணிக்கு பாரிய செல்வாக்கு இருப்பதால் அந்தக் கருத்துக்கணிப்பு எப்படியிருக்கும் என்று கேள்வி எழுப்பியுள்ள எதிரணியினர் அதனை நம்புவதற்கு தயாராக இல்லை என்கின்றது அவர்களின் தரப்பு.

என்ன இருந்தாலும் ரணில் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுவருவதால், ரணிலுடன் அவரின் பழைய கட்சிக்காரர்கள் இணைந்துவிடுவார்களோ என்பதில் மொட்டு அவதானமாக இருப்பதாக கூறப்படுகின்றது.

எது எப்படியோ, மொட்டு கட்சிக்காரர்களின் கோரிக்கையை ஏற்காது விட்டால் வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவது என்பது  ரணிலுக்கு சுலபமானதாக இருக்கப் போவதில்லை.!

**- ஊர்க்குருவி**

# வட்டி உயர்வால் பாதித்தோருக்கு நிவாரணம் வழங்கத் தீர்மானம்

## மத்திய வங்கி ஆளுநர் அறிவிப்பு



கொழும்பு, நவ. 19

ஏற்கனவே பெறப்பட்ட கடன்களுக்கான வட்டி வீதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துமாறு வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை தொடர்பான ஆலோசனைக் குழுவில், பாராளுமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

கடன் வட்டி வீதங்கள் அதிகரித்துள்ளதால், கடனைப் பெற்றுக்கொண்ட சிலருக்கு தமது சம்பளம் முழுவதையும் கடன் தவணையாக செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்த நிலையில், வாடிக்கையாளர்கள் வங்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிய வட்டியை சலுகைக் காலத்தில் செலுத்த முடியும் என மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்தார்.

தற்போதுள்ள நிதிக் கொள்கைகளின் மூலம், அடுத்த வருட இறுதிக்குள் பணவீக்கம் 4 முதல் 5 சதவீதமாகக் குறைவடையும் எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க சுட்டிக் காட்டினார். (அ)

# 31 திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட மென்பொருள் பொறியியலாளர் கைது!

கொழும்பு, நவ. 19

25 பணத்திருட்டுச் சம்பவங்கள் மற்றும் 6 கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 25 வயது மென்பொருள் பொறியியல் பட்டதாரி ஒருவரை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

நாரஹன்பிட்டி, கித்துல் வத்த பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். மஹரகம, பன்னிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேக நபர் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாரஹன்பிட்டி, வெல்லம்பிட்டிய, மஹரகம, கொஹுவல, மிரிஹான, பிலியந்தலை, மாலபே, வெலிக்கடையில் அவர் சுமார் 10 மில் லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களை கொள்ளையடித்துள்ளார்.

பொலிஸாரின் விசாரணையில், அவரி டம் இருந்து 3 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்கள் கிடைத்துள்ளன.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களையும் திருடி, பெண்களின் கைப்பைகளை பறித்து சென்றுள்ளார். அவர் தன்னிடம் உள்ள மென்பொருள் அறிவைப் பயன்படுத்தி பெண்களின் கைப்பையில் இருந்த ஏ.ரி.எம் அட்டைகளைக் கொண்டு பணம் எடுத்துள்ளார். (அ)

# உரியகாலத்தில் அடையாள அட்டை பெறாவிடின் 2,500 ரூபாய் அபராதம்

கொழும்பு, நவ. 19

ஆட்பதிவு சட்டத்தின் கீழ் சில விடயங்களுக்கான அபராதத் தொகை திருத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய 15 வயதை எட்டிய நாளிலிருந்து ஒரு வருடத்துக்குள் தேசிய அடையாள அட்டையை பெறாத விண்ணப்பதாரர்களுக்கு அறவிடப்படும் அபராத தொகை 2,500 ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திணைக்கள ரீதியான தாமதம் காரணமாக, முதல் விண்ணப்பத்திற்கு தேசிய அடையாள அட்டை வழங்குவதில் ஏற்படும் தாமதத்தினால் இரண்டாவது விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களிடம் 250 ரூபாய் கட்டணம் அறவிடப்படவுள்ளது.

திணைக்கள ரீதியான தாமதம் இல்லாத சந்தர்ப்பங்களில் முதற்தடவையாக தேசிய அடையாள அட்டை பெறாத விண்ணப்பதாரர்களிடம் 2500 ரூபாய் அறவிடப்படுமென ஆட்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது.

இரட்டைக் குடியுரிமை சான்றிதழ் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்கள் நிறைவடைவதற்குள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காத விண்ணப்பதாரர்களிடம் இருந்து 2500 ரூபாய் அபராதம் விதிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

போலி ஆவணங்கள் மற்றும் பிழையான தகவல்களை சமர்ப்பித்தல் உள்ளிட்ட, சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய குற்றங்களுக்கும் 2500 ரூபாய் அபராதம் விதிக்கப்படுமென ஆட்பதிவு திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.



# அனுமதியின்றி மரக்குற்றி கொண்டுசென்றவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 19

அனுமதிப்பத்திரம் இன்றி வேப்ப மரக் குற்றிகளைக் கொண்டு சென்ற ஒருவர் நேற்று கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கரந்தன் சந்தியில் வைத்து கோப்பாய் பொலிஸார் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

வேப்பமரக் குற்றிகளும் இவற்றை ஏற்றிச் சென்ற வாகனமும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. அத்துடன், சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-03)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2022**
“ ஒரு மரத்தை நடவு செய்வது பிரபஞ்சத்தின் லயத்துடன் உங்களை இணைத்துக்கொள்வதற்கான எளிதான வழியாகும்”
*- அமிட் றே (இந்திய ஆன்மீகக் குரு)*

Eelanadu ஈழநாடு
19.11.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சம்பந்தன் எதை விட்டுச் செல்லப் போகின்றார்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தை கூட்டுமாறு பங்காளிக் கட்சிகள் கோரியிருக்கின்றன. இதற்கு முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இவ்வாறான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில்தான், பங்காளிக் கட்சிகளான ரெலோ மற்றும் டி. பி. எல். எவ். (புளொட்) தலைவர்கள் சம்பந்தனுக்கும் தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கும் கூட்டத்தைக் கூட்டுமாறு அழைப்பு விடுத்திருக்கின்றனர்.

கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழ் அரசு கட்சியின் செயல்பாடுகளே கூட்டமைப்பின் நகர்வுகளுக்குக் குந்தகமாக இருப்பதான பார்வையுண்டு. இதனை அரசியல் அரங்கிலுள்ள பலரும் அறிவர். ஏனெனில், ஆரம்பத்திலிருந்தே கூட்டமைப்பை ஒரு கட்சியாகப் பதிவு செய்வதை தமிழ் அரசு கட்சியே எதிர்த்து வந்திருக்கின்றது. கூட்டமைப்பின் ஒற்றுமையை பேணிக்கொள்ளுமாறு தீர்மானங்களை மேற்கொள்ளுமாறு பங்காளிக் கட்சிகள் கோரியபோதிலும்கூட அதனை சம்பந்தன் கருத்தில்கொள்ளவில்லை.

2015 பாராளுமன்ற தேர்தலின்போது, ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தோல்வியடைந்தார். தேர்தல்களில் தோல்வியடைவதும், தோல்வியடைந்தவர்கள் வெற்றிபெறுவதும் சாதாரணமான விடயம். அப்போது கிடைத்திருந்த இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்களில் ஒன்றை சுரேஷ் பிறேமச்சந்திரனுக்கு வழங்குமாறு பலரும் கோரியிருந்தனர். இதன்மூலம் கூட்டமைப்பின் கட்டுக்கோப்பை பாதுகாக்கலாம் என்பதே அவ்வாறானவர்களின் நல்லெண்ணமாக இருந்தது. பங்காளிக் கட்சிகளும் அதனை எதிர்க்கவில்லை. ஆனால், சம்பந்தன் அதற்கும் இணங்கவில்லை.

சுரேஷ் பிறேமச்சந்திரன் வெளியேறிய பின்னரே சுமந்திரன் கூட்டமைப்பின் பேச்சாளராக நியமிக்கப்பட்டார். சுமந்திரன் பேச்சாளராக நியமிக்கப்பட்டமையைத் தொடர்ந்து கூட்டமைப்புக்குள் முரண்பாடுகளும் தொடர்ந்தன. சுமந்திரன் தன்னிச்சையாக செயல்படுகின்றார் என்பதே பங்காளிக் கட்சிகளின் குற்றச்சாட்டாக இருந்தது. ஆனால், சம்பந்தன் எதற்கும் பதிலளிக்கவில்லை. விடயங்களை ஆரம்பத்திலேயே சுமுகமாக கையாண்டிருந்தால் கூட்டமைப்பின் உள்முரண்பாடுகள் இந்தளவுக்கு வெட்டவெளிச்சமாகியிருக்காது. சம்பந்தன் தனது தலைமைத்துவப் பொறுப்பை சரிவர ஆற்றவில்லை. கூட்டமைப்பு கடந்த தேர்தலில் பின்னடைவுகளை சந்தித்தமைக்கு இவ்வாறான செயல்பாடுகளே பிரதான காரணமாகும். கூட்டமைப்பைப் பலப்படுத்தியிருந்தால், ஏனைய கட்சிகளை சேர்ந்தவர்கள் வெற்றிபெறும் சூழல் ஏற்பட்டிருக்காது. உண்மையில் கூட்டமைப்பின் மீதான அதிருப்தியே ஏனையவர்களை வெற்றிபெறச் செய்தது. மற்றும்படி அவர்களின் கொள்கையோ ஆற்றலோ இதற்குக் காரணமல்ல.

சம்பந்தனின் அசமந்த போக்குக்கு, தமிழ் அரசு கட்சியும் ஒரு பிரதான காரணமாகும். தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஓர் ஆளுமைமிக்க தலைமைத்துவத்தை வழங்கவில்லை. இப்போதும் கூட அவர் அதனை செய்ய முயற்சிக்கவில்லை. இந்த நிலையிலேயே கூட்டமைப்பை பலப்படுத்தும் முயற்சிகள் தொடர்ந்தும் தோல்வியடைந்து கொண்டேயிருக்கின்றன. தற்போது நிலைமை இன்னும் மோசமடைந்திருக்கின்றது. இந்த நிலையிலும்கூட, சம்பந்தன் தனது பாராளுமன்ற குழுத் தலைவர் பொறுப்பை பங்காளிக் கட்சிகளின் தலைவர்களில் ஒருவரிடம் ஒப்படைக்க மறுப்பதை எவ்வாறு புரிந்துகொள்ள முடியும்? இயலாத நிலையில்கூட இந்தப் பொறுப்புக்களை எதற்காக சம்பந்தன் மற்றவர்களிடம் ஒப்படைக்க மறுக்கின்றார்?

சம்பந்தனும், அதேபோன்று தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் இப்போதாவது நிலைமைகளைப் புரிந்துகொண்டு விரைந்து செயல்பட முன்வர வேண்டும். மக்களின் பெயரால் கிடைக்கப் பெற்ற பதவிகளையும் அதிகாரத்தையும் தங்களுடைய சுயநலன்களுக்கு பயன்படுத்த முற்படக்கூடாது. கூட்டமைப்பை பலப்படுத்தி அடுத்த தலைமுறையிடம் ஒப்படைக்கும் பணியை இனியும் தள்ளிப்போடக்கூடாது.

# ரணிலின் நேசக்கரம் குறித்து ஐயுறவு மனப்பான்மையில் தமிழ்க்கட்சிகள்

**மீரா சிறினிவாசன்**



இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்தவாரம் (நவ.10) பாராளுமன்றத்தில் தமிழ்க்கட்சிகளுக்கு நேசக்கரம் நீட்டி இவ்வாரம் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுத்ததுடன் நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்துக்கு (பெப்ரவரி 4, 2023) முன்னதாக தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்னைகளுக்கு தீர்வைக் காணப்போவதாகவும் உறுதியளித்தார். ஆனால், அவரின் அழைப்பு குறித்து தமிழ் அரசியல்வாதிகள் பெருமளவுக்கு ஐயுறவு மனப்பான்மை கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். பேச்சுவார்த்தைக்கான திகதியும் அறிவிக்கப்படவில்லை.

கடந்த காலத்தில் இலங்கையின் தலைவர்கள் பலர் தமிழ் தேசியப் பிரச்னைக்கு அரசியல் தீர்வைத் தருவதாக உறுதியளித்த போதிலும் பெரும்பாலும் அவர்கள் அதை தருவதற்கு தவறினார்கள். மிக அண்மைக்காலத்தில் மைத்திரிபால சிறிசேன - விக்கிரமசிங்க அரசாங்கம் 2015 - 2019 காலப்பகுதியில் புதிய அரசியலமைப்பு ஒன்றை வரைவதற்கு முயற்சித்தது. ஆனால், அதில் தோல்வி கண்டது. அந்த அரசாங்கத்தை ஆதரித்த தமிழ்க்கட்சிகளுக்கு அது பெரிய ஏமாற்றமாகப் போய்விட்டது.

"நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து 75 ஆவது சுதந்திர தினமளவில் இந்த பிரச்னைக்கு தீர்வைக் காண்போம். எமது நாட்டு விவகாரங்களில் மற்றவர்கள் தலையிடவேண்டிய தேவையில்லை. எமது பிரச்னைகளை எம்மால் தீர்க்கமுடியும்" என்று விக்கிரமசிங்க கடந்தவாரம் பாராளுமன்றத்தில் கூறினார்.

வடக்கு, கிழக்கில் இருந்து கூடுதல் எண்ணிக்கையில் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு ஜனாதிபதியின் அழைப்பை வரவேற்றதுடன் "முழுமையாக ஒத்துழைக்க" தயாராக இருப்பதாகவும் அறிவித்தது. பல தசாப்தங்களாக பல்வேறு சிங்கள தலைவர்களுடன் அரசியலமைப்பு மூலமான இணக்கத்தீர்வைக் காண்பதற்கு முயற்சித்து வந்திருக்கும் 89 வயதான தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இத்தடவை ஜனாதிபதியின் உறுதிமொழி உண்மையும் நேர்மையும் வாய்ந்ததாக இருக்கும் என்று நம்புவதாக கூறியிருக்கிறார். உத்தேச பேச்சுவார்த்தைக்கு முன்னதாக தென்னிலங்கை தலைமைத்துவம் ஒற்றையாட்சி அரசியலமைப்பைக் கைவிடத் தயாராக இருக்கவேண்டும் என்று வடமாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கூறியிருக்கிறார்.

**சமஷ்டிமுறை மீது கவனம்**

தமிழ் கட்சிகளிடையே வெளிப்படையான வேறுபாடுகள் இருக்கின்ற போதிலும் அந்த கட்சிகளை இவ்வாரம் பேச்சுவார்த்தை ஒன்றுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் அழைத்தார். "சமஷ்டி முறையொன்றின் கீழ் பயனுறுதியுடைய அதிகாரப்பரவலாக்கலை அடைவதையே நாம் எல்லோரும் பொதுக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறோம்" என்று அவர் கூறினார்.

திட்டமிட்டபடி தமிழ் கட்சிகளின் சந்திப்பு இடம்பெறவில்லை. அந்த சந்திப்பை நடத்துவோம் என்று நம்பிக்கை வெளியிட்ட சுமந்திரன் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் "அக்கறை" குறித்து சந்தேகம் கிளப்பினார்.


நவம்பர் 14 பட்ஜெட் உரைக்கு பிறகு இடம்பெற்ற தேநீர் விருந்தின்போது ஜனாதிபதியிடம் பேச்சுவார்த்தை குறித்து தான் கேட்டதாக சுமந்திரன் சொன்னார். "ஜனவரியில் தான் யாழ்ப்பாணத்துக்கு வருவதாக ஜனாதிபதி என்னிடம் கூறினார். அவர் அறிவித்த இவ்வார சந்திப்பு குறித்து நான் கேட்டபோது நாங்கள் விரும்பினால் இவ்வாரமே சந்திக்கமுடியும் என்று அவர் பதிலளித்தார். அவரது பதில் கருத்தூன்றிய முறையில் செயல் முனைப்புடன் எதையும் செய்வதில் அக்கறை கொண்டவராக அவர் இருப்பதை காட்டவில்லை" என்று அவர் கூறினார்.

பெருமளவிலான அதிகாரப்பரவலாக்கலுக்கும் அரசியல் தீர்வுக்குமான தேவையே இலங்கையில் இந்தியிவின் ஈடுபாட்டுக்கான மையமாகவும் இருந்து வந்திருக்கிறது. இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வைக் காண்பதாக அளித்த உறுதிமொழியை நிறைவேற்றுவதில் மதிப்பிடக்கூடிய முன்னேற்றத்தை காட்டவில்லை என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் செப்ரெம்பர் கூட்டத்தொடரில் இந்திய தூதுக்குழு விசனம் தெரிவித்தது. இலங்கை அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளின் போதாமைகள் குறித்து தமிழ்க்கட்சிகள் அடிக்கடி சுட்டிக்காட்டி வந்திருக்கின்ற போதிலும், அந்த திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இலங்கையை இந்தியா இடையறாது வலியுறுத்தி வந்திருக்கிறது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடுகளை கடுமையாக விமர்சிக்கின்ற அதே வேளை ஏனைய தமிழ் கட்சிகளுக்கு கூட்டமைப்பு அண்மையில் விடுத்த அழைப்பு வரவேற்கத்தக்கது என்று கூறினார். சமஷ்டி முறையை மீண்டும் நிகழ்ச்சி நிரலில் கொண்டு வந்ததே அவரின் இந்த வரவேற்புக்கான காரணமாகும். ஜனாதிபதி பேச்சுவார்த்தை ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்வதாக இருந்தாலும் கூட, சமஷ்டி அரசியலமைப்பு ஒன்றை அடிப்படையாகக் கொண்ட பேச்சுவார்த்தைக்கு வெளிப்படையாக

(14ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
பூர்வீக சொத்தில் இருந்த பிரச்னைகள் முடிவிற்கு வரும். எண்ணம் நிறைவேறும். முயற்சி கடைசி நேரத்தில் தள்ளிப்போகும். குடும்பத்தில் சல சலப்பு ஏற்பட்டு மறையும். எதிர்பார்த்தவற்றில் இழுபறி ஏற்படும்.

**இடபம்**
பூர்வீக சொத்தில் இருந்த பிரச்னைகள் முடிவிற்கு வரும். எண்ணம் நிறைவேறும்.முயற்சி கடைசி நேரத்தில் தள்ளிப்போகும். குடும்பத்தில் சல சலப்பு ஏற்பட்டு மறையும். எதிர்பார்த்தவற்றில் இழுபறி ஏற்படும்.

**மிதுனம்**
எதிர்பார்த்த வரவு வந்து சேரும். பொருளாதார நெருக்கடி விலகும். பழைய கடன் தீரும். புதிய முயற்சியில் ஈடுபட்டு ஆதாயம் காண்பீர்கள். பொருளாதார உயர்வு உண்டாகும்.

**கடகம்**
வார்த்தையில் கவனம் தேவை. பணம், நகைகள் விஷயத்தில் எச்சரிக்கை தேவை. நிதானம் அவசியம். குடும்பத்தினரால் சில நெருக்கடிகளுக்கு ஆளாவீர்கள். நினைப்பதற்கு மாறாக சில சம்பவம் நடைபெறும்.

**சிம்மம்**
மனதில் குழப்பம் அதிகரிக்கும். எதைச் செய்வதென தெரி யாமல் திண்டாடுவீர்கள். ஆசைகள் அதிகரிக்கும். தவறான வழியில் சம்பாதிக்கும் முயற்சியை தவிர்க்கவும். பழைய எதிரிகள் பலம் பெறுவார்கள்.

**கன்னி**
எதிர்பாராத பயணம் ஏற்படும். உங்கள் செயல்கள் பெரும் முயற்சிக்கிடையே நிறைவேறும். அவசிய செயல்களில் மட்டும் ஈடுபடுங்கள். பணம் பலவழிகளில் செலவாகி இருப்பு கரையும்.

**துலாம்**
முயற்சி வெற்றி பெறும். அடிப்படைத் தேவை நிறைவேறும். எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். சுவாதி: நண்பர்களிடம் கவனம் தேவை. பிறருக்கு செய்யும் உதவி சங்கடத்தை உண்டாக்கும் .

**விருட்சிகம்**
வியாபாரத்தை விரிவு செய்வீர்கள். பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். செல்வாக்கு உயரும். திட்டமிட்டு செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு**
இருப்பிடத்தை விரிவு செய்யும் முயற்சியில் ஈடுபடுவீரகள். எண்ணங்கள் நிறைவேறும். உங்கள் அணுகுமுறையில் மாற்றம் உண்டாகும். எதிரிகள் சரணடைவார்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மகரம்**
கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். முயற்சியில் நீங்கள் எதிர்பார்த்த நன்மை கிடைக்காமல் போகும். திருவோணம்: முயற்சி இழுபறியாகும். மனதைப் பாதிக்கும் வகையில் சில சம்பவங்கள் நடக்கலாம்.

**கும்பம்**
பழைய பிரச்னைக்கு முடிவு கட்டுவீர்கள். எதிர்பார்த்த வரவால் மகிழ்ச்சி அதிகரிக்கும் உறவினரிடம் ஏற்பட்ட பகை விலகும். உங்களை விட்டு விலகியவர்கள் தேடி வருவர். திறமை வெளிப்படும்.

**மீனம்**
கோயில் தரிசனம் மகிழ்ச்சி தரும். உடல் நிலையில் இருந்த சங்கடம் விலகும் முயற்சி ஒன்று நிறைவேறும். அத்தியாவசிய தேவைக்காக கடன் வாங்குவீர்கள் வீண் சங்கடங்களுக்கு ஆளாவீர்கள்.

## 6 பேர் விடுதலை விவகாரம்:

# அரசின் சீராய்வு மனுவை எதிர்த்து வாதிடுவோம்!

*சென்னை, நவ. 19*

6 பேர் விடுதலை தொடர்பாக மத்திய அரசாங்கம் தாக்கல் செய்துள்ள சீராய்வு மனுவை எதிர்த்து வாதிடுவோம் என்று சீமான் கூறியுள்ளார்.

சென்னையில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற சீமான் நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோது,

6 பேர் விடுதலை தொடர்பாக மத்திய அரசு தாக்கல் செய்துள்ள சீராய்வு மனுவை எதிர்த்து வாதிடுவோம். மத்திய அரசின் மனு அவசிய மற்றது. எளிதாக இந்த விடுதலை தீர்ப்பு கிடைக்கவில்லை. நீண்ட நாள் போராட்டம் இது. இதை சட்டபூர்வமாக அணுகாமல் மானுடப்பற்று, கருணையின் அடிப்படையில் அணுக வேண்டும். இந்த விவகாரத்தில் எனக்கு இருக்கும் வலியும் காயமும் அண்ணாமலைக்கு இருக்க வாய்ப்பு இல்லை. அது அவர்களின் கட்சி கோட்பாடு.

விடுதலை செய்யப்பட்டவர்களை இலங்கைக்கு அனுப்பக்கூடாது. அவர்கள் விரும்பும் நாட்டுக்குச் செல்ல வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தி.மு.கவுக்கும் நாம் தமிழர் கட்சிக்கும் இடையே நடப்பது பங்காளி சண்டை. இதற்காக பாரதிய ஜனதாவை எப்படி உள்ளே விட முடியும் - என்றார். (ஐ)

# அ. தி. மு. க. பொதுக்குழு கூட்டம் விரைவில் நடக்கும்!

## பன்னீர்செல்வம் அறிவிப்பு

*சென்னை, நவ. 19*

அ. தி. மு. க பொதுக்குழுக் கூட்டம் விரைவில் நடைபெறும் என முன்னாள் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

நிர்வாகிகள் நியமனத்துக்கு பிறகு மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெறும். பிரதமர், மத்திய அமைச்சர் அமித்ஷாவை சந்தித்தபோது அரசியல் குறித்து பேசவில்லை. உறுதியாக அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுப்பயணம் மேற்கொள்வேன். ஆதரவு நிர்வாகிகளை சந்தித்து பேச திட்டமிட்டுள்ளேன். வாய்ப்பு கிடைத்தால் அ. ம. மு. க. பொதுச் செயலாளர் டி. டி. வி. தினகரனை சந்திப்பேன் என்றார்.

ஓபிஎஸ் இவ்வாறு அறிவித்திருப்பது அ. தி. மு. க. தொண்டர்கள், நிர்வாகிகளிடையே பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது இதனிடையே அ.தி.மு.க. செயல்படாத கட்சியாக உள்ளது. எடப்பாடி பழனிசாமியுடன் கூட்டணி வைக்க வாய்ப்பு இல்லை என்றும் ஓ.பன்னீர் செல்வத்தை பொறுத்தவரை, அவர் ஒரு கட்டத்தில் பாதை மாறி சென்று தவறாக நடந்து கொண்டார். இப்போது எங்களுடன் இணைந்து போக வேண்டும் என்று பேசி வருகிறார். இதில் இருந்தே அவர் திருந்திவிட்டார் என்பது தெரிகிறது.தவறை உணர்ந்த பின்னர் அவருக்கு நேசக்கரம் நீட்டுவதில் ஒன்றும் தவறு இல்லை. வாய்ப்பு கிடைக்கும்போது ஓ. பன்னீர் செல்வத்தை நிச்சயம் சந்தித்து பேசுவேன் என டி. டி. வி. தினகரன் கூறியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழ்நாடு மாநிலம்தான் இந்தியாவுக்கே முன்னோடி!

*சென்னை, நவ. 19*

பல துறைகளில் இந்தியாவுக்கே தமிழ்நாடுதான் முன்னோடியாக உள்ளது. தொழில்சங்க இயக்கம் என்பது முதலில் உருவானது தமிழ்நாட்டில்தான் என்று தென்னிந்திய வேலையளிப்போர் கூட்டமைப்பின் நூற்றாண்டு விழாவில் முதல்வர் மு. க. ஸ்டாலின் பேசினார்.

இன்றைக்கு நமது ஆட்சியின் இலக்காக, அனைத்துத் துறையிலும் வளர்ச்சி என்பதை திராவிட மொடல் கோட்பாடாகக் கொண்டுள்ளோம் என்றால், அதற்கு அரசியல் - சமூகவியல் மட்டுமல்ல பொருளாதார மும் - தொழில் வளர்ச்சியும் உள்ளடங்கி இருக்கிறது.


இந்தியாவுக்குப் பல்வேறு வகைகளில் தமிழ்நாடுதான் முன்மாதிரி மாநிலம். தொழில்சங்க இயக்கம் என்பது இங்குதான் முதன்முதலாக உருவானது. பிரிட்டிஷார் அதிகப்படியான தொழிற்சாலைகளை இங்கு உருவாக்கினார்கள். அரசியல் உரிமையை மட்டுமல்ல தொழிலாளர் உரிமையையும் தமிழ்நாடு கேட்டுப் போராடியது.



இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர், தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக, ஒரு இலட்சம் கோடி டொலர் பொருளாதாரமாக மாற்ற முன்னெடுப்புகளை எடுத்து வருவதை நீங்களெல்லாம் நன்கு அறிவீர்கள்.

தமிழகத்தில் புதிய தொழில்கள் ஏராளமாக இந்த பதினைந்து மாத காலத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழக எல்லையைத் தாண்டி பல்வேறு மாநிலத்தில் இருந்தும் வந்து நிறுவனங்களைத் தொடங்குகிறார்கள். பல்வேறு நாடுகளில் இருந்தும் தொழில் தொடங்க வருகிறார்கள். அந்த வகையில் தான் தொழிலதிபர்களை - தொழில் நிறுவனங்களை ஈர்க்கும் மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது - என்றார். (ஐ)

# சென்னை விமான நிலையத்துக்கு மிரட்டல்!



*சென்னை, நவ. 19*

சென்னை விமான நிலையத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை விமான நிலையத்துக்கு மின்னஞ்சல் மூலமாக வெடிகுண்டு மிரட்டல் ஒன்று வந்துள்ளது.

இதையடுத்து பாதுகாப்பு அதிகாரிகள் தீவிர சோதனையில் ஈடுபட்டதை அடுத்து தகவல் பொய் என்று தெரிய வந்துள்ளது.

மேலும் மிரட்டல் விடுத்த நபரைத் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

# அரசாங்கத்தைப் புனர்வாழ்வளிக்க கந்தக்காட்டுக்கு அனுப்பவேண்டும்

## கூறுகின்றார் உதய கம்மன்பில



கொழும்பு, நவ. 19

**நாணயத்தாள்களை அச்சிடுவதற்கு தற்போதைய மத்திய வங்கியின் ஆளுநர் அடிமையாகியுள்ளார். அதேபோல் கடனைப் பெறுவதிலும் எங்களது அரசாங்கம் அடிமையாகி யுள்ளது. எனவே அரசாங்கத்தையும், ஆளுநரையும் புனர் வாழ்வளிக்க கந்தக்காட்டுக்கு அனுப்பவேண்டும் என சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

வரவு - செலவு திட்டம் மீதான நேற்றுமுன் தினம் பாராளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதிகளவான நாணயத்தாள்களை அச்சிட்டதால் ஏற்பட்ட பணவீக்கம் நாட்டின் பொருளாதார நெருக்கடியை தீவிரப் படுத்தியதாக மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்திருந்தார். அப்படிக்கூறிய அவரே, வரலாற்றில் அதிகளவான நாணயத்தாள்களை அச்சிட்டுள்ளார்.

பாதிப்புகளை அறிந்து வைத்திருந்தாலும் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களால் அதனைக் கைவிட முடியாது. அதுபோலதான் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவும் நாணயத்தாள்களை அச்சிடுவதற்கு அடிமையாகியுள்ளார். அதுபோல அரசாங்கமும் கடனைப் பெறுவதற்கு அடிமையாகியிருக்கிறது. எனவே, மத்திய வங்கியின் ஆளுநரையும், எங்களது அரசாங்கத்தையும் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி புனர்வாழ்வளிக்க வேண்டும்-என்றார். (அ)



# தேசிய கல்வி நிறுவகத்தின் புத்தக விற்பனைக் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ. 19

தேசிய கல்வி நிறுவகத்தின் ஏற்பாட்டில், தேசிய கல்வி நிறுவகத்தினால் அச்சிடப் பட்ட புத்தகக் கண்காட்சியும், புத்தக விற்பனை நிகழ்வும் நேற்று யாழ். மத்திய கல்லூரி றோமைன் மண்டபத்தில் நடைபெற்றது.

விருந்தினர்கள் மாலை அணிவித்து மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டு, மங்கள விளக்கேற்றி வைத்து, இரண்டு நிமிட அக வணக்கத்துடன் நிகழ்வு ஆரம்பமானது.

தேசிய கல்வி நிறுவகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் ஜே.பிறட்லி தலைமை தாங்கியதுடன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இரா. வரதீஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இக் கண்காட்சியில் தேசிய கல்வி நிறுவகத்தின் அச்சிடல் மற்றும் வெளியீடுகள் துறையின் பணிப்பாளர் கே.பிரபாகரன், மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், தேசிய கல்வி நிறுவகத்தின் பதவி நிலை அதிகாரிகள், வடக்கு மாகாணக் கல்வித் திணைக் களத்தின் பதவி நிலை அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த கண்காட்சியானது எதிர்வரும் 20ஆம் திகதி முதல் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெறும் என்பதுடன் இதன்போது புத்தகங்கள் 20 வீத விலைக்கழிவுடன் விற்பனை செய்யப்படவுள்ளன. (அ)

# பாடசாலை உபகரணங்களின் விலை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, நவ. 19

செஸ் வரி திருத்தம் காரணமாக அத்தியாவசிய பாடசாலை உபகரணங்களின் விலையில் ஏதேனும் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தால் அதனை மாற்றியமைக்கவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே இராஜாங்க அமைச்சர் இதனை தெரிவித்தார்.

செஸ் வரி மாற்றத்தால் பாடசாலை உபகரணங்களின் விலை உயர்வு குறித்து, சிறப்பு விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற இருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ்ப்பாணத்தில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற இருவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், இலங்கை மின்சார சபையினர் பொலிஸாரின் உதவியுடன் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்த நிலையில், சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தைப் பெற்று பாவனை செய்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# ஐ.நா. சபைக் குழுவினருடன் யாழ். மாநகர மேயர் சந்திப்பு



யாழ்ப்பாணம், நவ. 19

ஐக்கிய நாடுகள் சபையின் குழுவினருக்கும் யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணனுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம் பெற்றது.

நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண மாநகர சபையில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் விவகாரங்கள் திணைக்கள ஆசிய பசுபிக் பிரிவுக்கான பணிப்பாளர் பீற்றர் டியு, அரசியல் விவகார அதிகாரி அல்மா சாலியு, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஆகியோர் அடங்கிய குழுவினரே யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணனைச் சந்தித்து பேசினர்.

இந்த சந்திப்பின் நிறைவில், ஐக்கிய நாடுகள் சபையின் குழுவினருக்கு, நினைவுச் சின்னமொன்றும் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வருகை தந்த ஐக்கிய நாடுகள் சபையின் குழுவினர், பல்வேறு தரப்புகளையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# சகல அரச அலுவலகங்களின் காணிப் பிரிவுகளிலும் ஊழல்

கொழும்பு, நவ. 19

இலங்கையில் உள்ள அனைத்து அரச அலுவலகங்களின் காணி பிரிவுகளும் ஊழல் மலிந்துள்ளதாகவும், அதனை எவரேனும் மறுத்தால் அதனை நிரூபிக்க தயார் எனவும் முன்னாள் ஜனாதிபதியும் பொலனறுவை மாவட்ட சபை உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

போராட்டத்தின் தோற்றம் குறித்து ஆராய்ந்து பாராளுமன்றத்தில் அறிக்கையைப் பெறுவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிப்பது முக்கியமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின்போதே முன்னாள் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (அ)

# அலரி மாளிகைக்குள் அத்துமீறி நுழைந்த மற்றுமொரு நபர் கைது

கொழும்பு, நவ. 19

கடந்த ஜூலை மாதம் 9ஆம் திகதி அலரிமாளிகைக்குள் பலவந்தமாக நுழைந்து பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த மற்றுமொரு நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு தெற்கு குற்றத் தடுப்பு பிரிவின் அதிகாரிகளினால் குறித்த நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

44 வயதுடைய சந்தேகநபர் கொட்டாஞ்சேனை பிரதேசத்தைச் சேர்ந்தவராவர்.

இது தொடர்பில் கொழும்பு தெற்கு குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# இலங்கைப் பெண்கள் விற்பனை; ஓமான் தூதரக அதிகாரி பணிநீக்கம்

கொழும்பு, நவ. 19

சுற்றுலா விசா ஊடாக ஓமானுக்கு அழைத்துச் செல்லப்படும் இலங்கைப் பெண்கள் அங்கு விற்பனைச் செய்யப்படுவதாக கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில், இலங்கைக்கான ஓமானிய தூதரகத்தில் பணியாற்றும் இரண்டாம் நிலை உயரதிகாரி ஒருவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் அவர் இலங்கைக்கு அழைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப் படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

சுற்றுலா விசாவை பயன்படுத்தி ஓமானுக்கு அழைத்துச் செல்லப்படும் இலங்கைப் பெண்கள் அங்கு விற்பனை செய்யப்படுவதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகி இருந்தன.

இந்த கடத்தல் சம்பவத்தில் இலங்கையின் விமான நிலையத்தில் பணியாற்றும் அதிகாரி ஒருவர் தொடர்பு கொண்டுள்ளதாகவும், ஓமானில் பணியாற்றும் தூதரக அதிகாரி ஒருவர் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதன் அடிப்படையிலேயே ஓமானில் பணியாற்றும் இலங்கை தூதரக அதிகாரி பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். (அ)

# இன்று இலங்கைக்கு திரும்புகிறார் பஸில்!

## பட்ஜெட்டுக்கு பெரும்பான்மையை பெற்றுக்கொடுக்கும் நோக்கத்தில்



கொழும்பு, நவ. 19

வரவு-செலவுதிட்டத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ இன்று சனிக்கிழமை நாடு திரும்பவுள்ளார்.

சமீபத்தைய அரசியல் நெருக்கடியை தொடர்ந்து பதவி விலகி-செப்ரெம்பரில் அமெரிக்க சென்ற பஸில் ராஜபக்ஷ சனிக்கிழமை மீண்டும் நாடு திரும்பவுள்ளார்.

அவர் வரவு - செலவுதிட்டத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொடுப்பது குறித்த முயற்சிகளை ஆரம்பிப்பார்.

அமெரிக்காவிலிருந்து புறப்பட்டுள்ள பஸில் ராஜபக்ஷ இன்று சனிக்கிழமை நாட்டை வந்தடைவார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை மீளக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் வரவு - செலவு திட்டத்திற்கான ஆதரவை பெற்றுக்கொடுப்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதே அவரது உடனடி நடவடிக்கையாகக் காணப்படும்.

வரவு - செலவுத் திட்டத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவதே அரசாங்கத்தின் நோக்கமாக காணப்படுகின்றது. இதன் மூலம் அடுத்த வருடம் பொதுத்தேர்தல் இடம்பெறும் வரை நெருக்கடி இன்றிச் செயற்படலாம் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. (அ)

# 2 வயதுப் பெண் குழந்தையின் உடலில் ஐஸ் போதைப்பொருள்

யாழ்ப்பாணம், நவ. 19

உயிர்கொல்லி ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையான தந்தையால் 2 வயதுப் பெண் குழந்தை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறது.

முல்லைத்தீவு கொக்கிளாயைச் சேர்ந்த 2 வயதுப் பெண் குழந்தை காய்ச்சல் காரணமாக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது. குழந்தைக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது குழந்தையின் உடலில் ஐஸ் போதைப்பொருள் உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் குழந்தையின் தந்தை உயிர்க்கொல்லி ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

குழந்தை வீட்டிலிருந்து போதைப்பொருளை விளையாட்டாக எடுத்து உட்கொண்டு இருக்கலாமென விசாரணைகளில் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (அ)

# இரசாயன பதார்த்தங்கள் பற்றாக்குறை இரத்த பரிசோதனைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, நவ. 19

இரசாயனப் பதார்த்தங்களின் பற்றாக்குறையால் இரத்தப்பரிசோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலைகள் பல தெரிவித்துள்ளன.

லேடி றிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை, காசல் வீதி மகளிர் வைத்தியசாலை உட்பட பல வைத்தியசாலைகளில் இவ்வாறு இரத்தப் பரிசோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால், தனியார் ஆய்வகங்களில் இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டிய நிலைக்கு நோயாளர்கள் தள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

எனினும், இரசாயனப் பதார்த்தங்கள் தட்டுப்பாடு ஏற்பட்டாலும் வைத்தியசாலை அமைப்பு வீழ்ச்சியடையாது என காசல் வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார். (அ)

# கறுப்புச் சந்தையில் கூட மண்ணெண்ணெய் இல்லை

## லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகிறார்

கொழும்பு, நவ. 19

கண்டி மாவட்டத்தில் தற்போது மண்ணெண்ணெய் இல்லை என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய கிரியெல்ல, பொது மக்களுக்கு மண்ணெண்ணெய் பெறுவதற்கு வழியில்லாதது டன், கண்டியில் கறுப்புச் சந்தையில் கூட மண்ணெண்ணெய் தீர்ந்துவிட்டதாக சுட்டிக்காட்டினார்.

இப்பிரச்னைகளால் சிறு வணிகர்களும், பொது மக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அவர் கூட்டிக்காட்டினார்.

எனவே இந்த பிரச்னைகளுக்கு உடனடியாக தீர்வு காணுமாறு பிரதமரிடமும் அரசாங்கத்திடமும் லக்ஸ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்தார். (அ)

# கல்கமுவ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இராணுவ மேஜர் உட்பட மூவர் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 19

கல்கமுவ பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இராணுவ மேஜர் உட்பட மூவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் பயணித்த வாகனம் சுவரில் மோதியதில் மூவரும் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கமுவ, இஹலகம பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

உயிரிழந்த இராணுவ மேஜர் 35 வயதுடைய இராணுவ வீரர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# குற்றக் கும்பலைச் சேர்ந்த இருவர் சுட்டுப் படுகொலை

கொழும்பு, நவ. 19

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருடன் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிச் சூட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம், மினுவாங்கொடை பொல்வத்தை, பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஒகஸ்ட் 24 ஆம் திகதி ஊரகஹ பிரதேசத்தில் நபர் ஒருவரைச் சுட்டுக் கொன்றமை மற்றும் யக்கலமுல்ல பகுதியில் கடந்த ஒக்டோபர் 19 ஆம் திகதி நான்கு வயது சிறுவன் மற்றும் அவரது தந்தை சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில், துப்பாக்கிச் சூடு நடத்திய நபரையும் மோட்டார் சைக்கிள் செலுத்திய நபரையும் கைதுசெய்ய சென்ற போதே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த சந்தேகநபர்கள் மினுவாங்கொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரி ஒருவரும் சிறு காயங்களுக்கு உள்ளாகி மினுவாங்கொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இருவரும், தற்போது வெளிநாட்டில் உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் ஒன்றின் தலைவரும் பாரியளவிலான போதைப் பொருள் கடத்தல்காரருமான ஊரகஹ இந்திக்கவின் பிரதான உதவியாட்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் போத்தல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்களிடமிருந்து ரி - 56 ரக துப்பாக்கி ஒன்றும், போர - 12 துப்பாக்கி ஒன்றும், ரம்போ ரக கத்தி ஒன்றும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மினுவாங்கொடை பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 19

இலங்கைக்கு நாளாந்தம் வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1800ஆக அதிகரித்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இம்மாதம் கடந்துள்ள காலப்பகுதியை கருத்திற்கொண்டு சுற்றுலாப் பயணிகளின் தினசரி வருகை பதிவு செய்யப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சராசரியாக, தினசரி சுமார் 2,000 சுற்றுலாப் பயணிகள் வருகைத் தருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதத்தில் இதுவரை 27 ஆயிரத்து 213 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் ரஷ்யப் பிரஜைகள் எனவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் THUYAR.NET நெற்
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN NEWS
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

# பட்ஜெட்டை எதிர்க்கும் மனநிலையில் உள்ளேன்!

## சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 19

அங்கவீனர்களுக்காக ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு வந்த 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை 2500 ரூபாவாக குறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதே போன்று பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டு இருப்பதால் இந்த 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்கும் மனநிலையில் உள்ளேன் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் வைத்து நேற்று வெள்ளிக்கிழமை மதியம் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறார்.

இன்று இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு முதல் காரணம் 1956ம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வந்து இனவாத கருத்துக்களோடு ஆட்சியாளர்கள் பயணித்ததன் காரணமாக இன்று இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது.

1956இல் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வந்தபோது சிங்கள மக்கள் அதை எதிர்த்து தடுத்திருந்தால் இன்று சிங்கப்பூர் இலங்கையிடம் கடன் கேட்கின்ற நிலமைக்கு வளர்ந்திருக்கும். ஆகவே அடிப்படை பிரச்சனை அங்கிருந்து தான் உருவாகியுள்ளது.

இப்படியான சூழலில் தற்போது இந்த பொருளாதார நெருக்கடியின் மத்தியில் ஜனாதிபதி வரவு செலவு திட்டம் முன்மொழிந்தது மக்களின் வாழ்க்கைச் சுமையை குறைப்பதற்கு பொருத்தமாக அமையவில்லை.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் பல அமைச்சுக்களுக்கு நிதிகள் முன்மொழியப்பட்டு இருந்தாலும் இலங்கையின் வருமானம் அதில் சரியாக குறிக்கப்படவில்லை.

குறிப்பாக அங்கவீனர்களுக்கு ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு வந்த 5000 ரூபா பணத்தைக் கூட 2500 ரூபாவாக குறைப்பதற்கு இந்த அரசு முயற்சித்து வருகிறது.

இதேபோன்று பல அதிருப்தியான விடயங்கள் இந்த வரவு செலவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எனவே வரவு - செலவுத் திட்டத்தில் கட்சி முடிவெடுக்கவில்லை.

எனது தனிப்பட்ட கருத்தாக இந்த வரவு செலவு திட்டத்தை எதிர்க்கும் மனநிலையில் தான் நான் இருக்கிறேன் - என்றார். (அ)

# பரீட்சைக்கு முன்பாகவே வெளியானது வினாத்தாள்

கொழும்பு, நவ. 19

மேல்மாகாண கல்வி திணைக்களத்தினால் நடத்தப்படும் பாடசாலை தவணைப் பரீட்சையின் வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னதாக வெளியாகியுள்ளமையினால் பல பாடசாலைகள் பரீட்சையை இடைநிறுத்த தீர்மானித்துள்ளதாக கொழும்பில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர் தெரிவித்தார்.

மேல்மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளிலும் தரம் 10 மற்றும் 11 ஆம் வகுப்புகளுக்கான பரீட்சை நேற்று ஐந்தாம் நாளாக நடைபெற்றதாக தெரிவித்த அவர், மேல்மாகாணத்தில் தவணைப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் சில நாட்களுக்கு முன்பிருந்தே மாணவர்கள் கரங்களுக்கு சென்றுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

வினாத்தாள்கள் மற்றும் விடைத்தாள்கள் இரண்டும் பிள்ளைகளிடம் இருக்கும் போது பரீட்சை நடத்துவதால் எந்த பயனும் இல்லை எனவும் இதன் காரணமாக கொழும்பில் உள்ள பல பாடசாலைகள் பரீட்சையை இடைநிறுத்த தீர்மானித்துள்ளதாகவும் அதிபர் தெரிவித்தார்.

இந்த நிலையில் பரீட்சை நடத்துவதற்கும் விடைத்தாள்களை சரி பார்ப்பதற்கும் ஆசிரியர்கள் நேரத்தையும் உழைப்பையும் செலவழித்தும் பலனில்லை எனத் தெரிவித்த அதிபர், மேல்மாகாணக் கல்வித் திணைக்களம் இது தொடர்பில் உடனடியாக ஆராயவேண்டும் என்றும் அவர் கூறினார். (அ)

# நயினை அம்மன் ஆலய நிதி பங்களிப்பில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு உதவி



யாழ்ப்பாணம், நவ. 19

நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தின் நிதி பங்களிப்பில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு புதிய இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

யாழ்.போதனா வைத்தியசாலையின் எலும்பு முறிவு சத்திர சிகிச்சைப் பிரிவின் தேவைக்காக, ஒன்பது இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் நேற்று வெள்ளிக்கிழமை கொள்வனவு செய்யப்பட்டது.

குறித்த உபகரணத்தை கொள்வனவு செய்யத் தேவையான நிதியினை, நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபையினால், வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனானந்தாவிடம் கடந்த 17ஆம் திகதி கையளிக்கப்பட்டது.

இதற்கமைய யாழ். போதனா வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை கூடத்திற்காக புதிய இயந்திர உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. (அ-3)

# போதை பாவனையாளர்கள் 121 பேருக்குப் புனர்வாழ்வு!

வவுனியா, நவ. 19

வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் போதைப் பாவனைக்கு அடிமையாகிய 121பேருக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

இவர்கள், நீதிமன்ற உத்தரவின்பேரில் தங்கவைக்கப்பட்டு புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

வட பகுதியைச் சேர்ந்த இளைஞர்களே போதைக்கு அடிமையாகிய நிலையில் பொலிஸாரால் அழைத்து வரப்பட்டு புனர்வாழ்வுக்கு உட்பட்டு வருகின்றனர்.

கடந்த 15ஆம் திகதி ஐவர் குறித்த புனர்வாழ்வு நிலையத்திலிருந்து தப்பித்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# அமெரிக்காவின் முதல் சொகுசு பயணிகள் கப்பல் கொழும்பில்!

கொழும்பு, நவ. 19

அமெரிக்காவின் முதலாவது சொகுசு பயணிகள் பயணக் கப்பலான 'வைக்கிங் மார்ஸ்'நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

900 சுற்றுலாப் பயணிகளுடன் இலங்கை வந்துள்ள குறித்த கப்பலானது இன்று வரை கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கவுள்ளது.

கப்பலில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகள், இலங்கையின் முக்கிய இடங்களை பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, கண்டி, பின்னவெல, காலி போன்ற நகரப் பயணங்கள்கொழும்பின் சில முக்கிய இடங்களுக்கு அவர்கள் அழைத்துச் செல்லப் படவுள்ளனர். (அ)

# மலையகத் தமிழர்களின் தேசிய அரசியல் அபிலாஷை ஆவணம் ஐ.நாவிடம் கையளிப்பு



கொழும்பு, நவ. 19

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தலைமையிலான கூட்டணி தூதுக்குழு, ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் துறை பணிப்பாளர் பீற்றர் டியூவை சந்தித்தது.

கூட்டணி பிரதித் தலைவர் வெ. இராதாகிருஷ்ணன், எம்பி உதயகுமார் ஆகியோர் கூட்டணி தலைவர் மனோ கணேசனுடன் கலந்துக்கொண்டனர்.

ஐ.நா சபையின் சார்பாக இலங்கையின் ஐநா நிரந்தர பிரதிநிதி ஹனா சிங்கர் மற்றும் அதிகாரிகள் அரசியல் துறை பணிப்பாளர் பீற்றர் டியூவுடன் கலந்துகொண்டனர்.

இந்திய வம்சாவளி மலையக தமிழரது அரசியல் கோரிக்கைகள் தொடர்பிலும், ஐநா உலக உணவு திட்டம் மற்றும் உலக வங்கி ஆகிய சர்வதேச அமைப்புகள், உணவின்மை மற்றும் வறுமை ஆகியவற்றால் பின்தங்கிய நலிவுற்ற மக்களாக கணக்கெடுத்து அடையாளப்படுத்தியுள்ள பெருந்தோட்ட மக்கள் மற்றும் நகர பாமர மக்கள் தொடர்புகளிலும் ஐ.நா அதிகாரிகளுக்கு விளக்கி கூறப்பட்டன. இச்சந்திப்பின் போது, தமிழ் முற்போக்கு கூட்டணி தொகுத்துள்ள, இந்திய வம்சாவளி மலையக தமிழர்களின் தேசிய அரசியல் அபிலாஷை ஆவணம், பணிப்பாளர் பீற்றர் டியூவுக்கு, கூட்டணி தலைவரால் வழங்கப்பட்டது.

தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு, தென்னிலங்கையில், வாழும் சிறுபான்மை தமிழ் மக்கள் எதிர்நோக்கும் முக்கியமான சவால்கள் தொடர்பில் ஆராய விரும்புகின்றோம் என கொழும்பில் உள்ள ஐநா காரியாலயம் விடுத்துள்ள அழைப்பின் பேரில் இச்சந்திப்பு நிகழ்ந்துள்ளது. (அ)



# கால்பந்து உலகக் கோப்பை: புலம்பெயர் தொழிலாளர்களின் மரணங்களை குறைத்துக் காட்டுகிறதா கட்டார்?

உலகக் கோப்பை கால்பந்து இறுதிப் போட்டிக்காக விரைவில் கட்டார் வரவிருக்கும் ரசிகர்கள், பல்லாயிரக்கணக்கான புலம்பெயர்ந்த தொழிலாளர்களால் கட்டப்பட்ட மைதானங்களில் போட்டியை கண்டுகளிக்க உள்ளார்கள்.

இந்தப் புலம்பெயர் தொழிலாளர்களை நடத்திய விதத்திற்காக கட்டார் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

இந்த உலகக்கோப்பை தொடருக்காக கட்டார் 7 மைதானங்களை கட்டியுள்ளது. அதேபோல, புதிய விமான நிலையங்கள், மெட்ரோ, தொடர் சாலைகள் மற்றும் 100 புதிய தங்கும் விடுதிகள்வரை கட்டப்பட்டுள்ளன. இவை அனைத்தும் இறுதிப்போட்டி நடைபெறும் மைதானத்தை சுற்றியுள்ள பகுதிகளில் கட்டப்பட்டுள்ளன.

மைதானங்களைக் கட்டுவதற்காக மட்டும் 30,000 புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டதாக கட்டார் அரசு தெரிவிக்கிறது. இவர்கள் அனைவரும் பெரும்பாலும் இந்தியா, வங்கதேசம், நேபாளம் மற்றும் பிலிப்பைன்ஸில் இருந்து வரவழைக்கப்பட்டனர்.

## எத்தனை புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மரணமடைந்தனர்?

உலகக் கோப்பை நடத்துவதற்கான உரிமையை கட்டார் பெற்றதிலிருந்து இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், வங்கதேசம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த 6,500 புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளதாக கடந்த 2021ஆம் ஆண்டு பிப்ரவரியில் தி கார்டியன் நாளிதழ் கூறியது.

இந்த எண்ணிக்கை கட்டார் உள்ள தூதரகங்கள் வழங்கிய புள்ளிவிவரங்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கை தவறான புரிதலை ஏற்படுத்துவதாக தெரிவித்துள்ள கட்டார் அரசாங்கம், இந்த இறப்புகள் அனைத்தும் உலகக் கோப்பை தொடர்பான திட்டங்களில் பணியாற்றியவர்களுடையது அல்ல எனத் தெரிவித்துள்ளது.

இறந்தவர்களில் பலர், பல ஆண்டுகளாக கட்டாரில் பணிபுரிந்தவர்கள் என்றும், இவர்கள் முதுமை அல்லது பிற இயற்கைக் காரணங்களால் இறந்திருக்கலாம் என்றும் கட்டார் அரசு கூறியுள்ளது.

2014 மற்றும் 2020க்கு இடைப்பட்ட காலத்தில், உலகக் கோப்பை மைதானக் கட்டுமான தளங்களில் பணியாற்றிய 37 தொழிலாளர்கள் இறந்துள்ளதாகவும், அதில் மூன்று பேர் மட்டுமே வேலை தொடர்பான விபத்தில் இறந்ததாக விபத்து தொடர்பான பதிவுகள் காட்டுவதாக அரசு கூறியுள்ளது.

எனினும், சர்வதேச தொழிலாளர் அமைப்பு இந்தக் எண்ணிக்கை குறைத்துக்காட்டப்பட்டுள்ளதாக கூறுகிறது. மாரடைப்பு மற்றும் சுவாசக் கோளாறினால் ஏற்படும் மரணங்களை வேலை தொடர்பான விபத்தாக கட்டார் அரசு கணக்கிடவில்லை என்று அந்த அமைப்பு கூறுகிறது. இவை அதிக வெப்பத்தில் கடினமான வேலைகள் செய்யும் போது ஏற்படக்கூடியவை.



கட்டார் அரசு மருத்துவமனைகள் மற்றும் அம்புலன்ஸ் சேவை வழங்குபவர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் உலகக் கோப்பை திட்டங்களில் நிகழ்ந்த விபத்து தொடர்பான சொந்த புள்ளிவிவரங்களை அந்த அமைப்பு தொகுத்துள்ளது.

2021ஆம் ஆண்டில் மட்டும் 50 புலம்பெயர் தொழிலாளர்கள் மரணமடைந்ததாகவும், 500க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகவும், 37,600 பேர் லேசான மற்றும் மிதமான காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் அந்தப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

புலம்பெயர் தொழிலாளர்களின் மரண எண்ணிக்கையை கட்டார் அரசு குறைவாக பதிவு செய்துள்ளதற்கான சில ஆதாரங்களை பிபிசி அரபு சேவை சேகரித்துள்ளது.

## புலம்பெயர் தொழிலாளர்கள் எப்படி நடத்தப்பட்டார்கள்?

உலகக் கோப்பை நடத்தும் உரிமையை 2010ஆம் ஆண்டு கட்டார் பெற்றது முதல், புலம்பெயர்



தொழிலாளர்கள் நடத்தப்படும் விதத்தை மனித உரிமை குழுக்கள் விமர்சித்து வருகின்றன.

2016ஆம் ஆண்டு அம்னெஸ்டி இன்டர்நேஷனல் எனும் மனித உரிமை அமைப்பு கட்டார் நிறுவனங்கள் தொழிலாளர்களை கட்டாய வேலையில் ஈடுபடுத்துவதாக குற்றம் சாட்டியது.

மேலும், பல தொழிலாளர்கள் மோசமான தங்குமிடங்களில் வசிப்பதாகவும், பெரும் தொகையில் ஆட்சேர்ப்பு கட்டணங்கள் செலுத்த கட்டாயப் படுத்தப்பட்டதாகவும், ஊதியம் நிறுத்தப்பட்டதாகவும், அவர்களது பாஸ்போர்ட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அந்த அமைப்பு கூறியது.

புலம்பெயர் தொழிலாளர்களை கடும் வெப்பமான காலநிலைக்கு மத்தியில் வேலை செய்வதிலிருந்து பாதுகாப்பதற்கும், வேலை நேரத்தைக் குறைக்கவும், தொழிலாளர் முகாம்களின் நிலைமைகளை மேம்படுத்தவும் கடந்த 2017ஆம் ஆண்டு சில நடவடிக்கைகளை கட்டார் அரசு அறிமுகப்படுத்தியது.

எனினும், மனித உரிமைகள் கண்காணிப்பு குழுவின் 2021ஆம் ஆண்டின் அறிக்கையில், புலம்பெயர் தொழிலாளர்கள் இன்னும் தண்டனை மற்றும் சட்டவிரோத ஊதிய பிடித்தத்தால் அவதிப்படுவதாகவும், மாதக்கணக்கில் ஊதியம் வழங்கப்படாத நிலையை எதிர்கொண்டதாகவும் கூறுகிறது.

கட்டார் நிறுவனங்கள் ‘ஹவாலா’ என்ற அமைப்பு முறையில் செயல்படுகின்றன. அதன் மூலம் புலம்பெயர் தொழிலாளர்கள் கட்டார் வருவதற்கு நிதியுதவி அளித்து, பின்னர் அவர்கள் வேலையை விட்டு வெளியேறுவதைத் தடுக்கின்றனர்.

ஐஎல்ஓ போன்ற குழுக்கள் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக கட்டார் அரசு இந்த நடைமுறையை ரத்து செய்தது. ஆனால், தொழிலாளர்கள் வேறு நிறுவனங்களுக்கு மாறுவதைத் தடுக்க இன்னும் அழுத்தம் கொடுக்கப்படுவதாக அம்னஸ்டி இன்டர்நேஷனல் அமைப்பு கூறுகிறது.

உலகக் கோப்பை பிரசாரம் தலைநகர் டோஹாவை விட்டு வெளியேறிய பிறகு தொழிலாளர் சீர்திருத்தங்களின் முன்னேற்றம் நிறுத்தப்படக் கூடாது என்றும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

## கட்டார் அரசு என்ன கூறுகிறது?

ஐஎல்ஓ அமைப்புடன் இணைந்து செயல்படும் கட்டார் அரசு, பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

முதலாளிகள் தங்கள் ஊழியர்களுக்கு உரிய நேரத்தில் ஊதியம் வழங்குவதை உறுதிசெய்ய வடிவமைக்கப்பட்ட ஊதிய பாதுகாப்பு திட்டமும் இதில் அடங்கும்.

அரசு செய்தித் தொடர்பாளர் பேசுகையில், இந்த சீர்திருத்த நடவடிக்கை கட்டார் உள்ள பெரும்பாலான புலம்பெயர் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை மேம்படுத்தி வருவதாகக் கூறினார்.

சீர்திருத்தங்கள் திறம்பட செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், விதிகளை மீறும் நிறுவனங்களின் எண்ணிக்கை தொடர்ந்து குறையும் என்கிறார்.

## உலகக் கோப்பை தொடரில் பங்கேற்கும் நாடுகள் என்ன சொல்கின்றன?

இறுதிப் போட்டியின் போது இந்த விவகாரம் கவனம் பெற வாய்ப்புகள் உள்ளன.

கால்பந்து போட்டியில் மட்டும் கவனம் செலுத்துங்கள் என இந்தத் தொடரில் பங்கேற்கும் 32 நாடுகளுக்கு சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு கடிதம் எழுதியுள்ளது. அந்தக் கடிதத்தில் சித்தாந்த அல்லது அரசியல் விவகாரங்களுக்குள் விளையாட்டை இழுக்க கூடாது எனக் கூறப்பட்டுள்ளது.

ஆனால், இதற்குப் பதிலளித்துள்ள இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் உட்பட பத்து ஐரோப்பிய கால்பந்து சங்கங்கள், “மனித உரிமைகள் உலகளாவியது மற்றும் அனைத்து இடங்களுக்கும் பொருந்தும்” என்று கூறியுள்ளது.

புலம்பெயர் தொழிலாளர்களை தவறாக நடத்தும் கத்தாரை விமர்சித்து ஆஸ்திரேலிய கால்பந்து அணி ஒரு காணொளி வெளியிட்டுள்ளது.

கத்தாரின் இந்தச் செயலைக் கண்டிக்கும் விதமாக டென்மார்க் வீரர்கள் சிறப்பு ஜெர்சி அணிந்து விளையாட உள்ளனர்.

(பிபிசி)

## இலங்கையின் பொருளாதார நோயை சமாளிக்கும் ரணில் அரசபொருளியல்



அ. வரதராஜா பெருமாள்

பகுதி 5

# உலக விலை உயர்வாலேயே ஏற்றுமதி வருமான அதிகரிப்பு!

*16.* கடந்த சில மாதங்களாக ஏற்றுமதி வருமானங்கள் அதிகரித் திருப்பதாக அரச அறிக்கைகள் அடிக் கடி தெரிவிக்கின்றன. இதனுடைய அர்த்தம் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் தொகை ரீதியில் குறிப் பிடத்தக்க அளவுக்கு அதிகரித்திருக் கின்றன என்பதல்ல. ரஸ்ய - உக்ரைன் யுத்தத்தின் காரணமாகவும் அதனை யொட்டி ரஸ்யாவின் சர்வதேச வர்த் தகத்துக்கு எதிராக அமெரிக்க விதித் துள்ள பொருளாதார தடையினாலும் பொதுவாகவே உலக சந்தையில் பொருட்களின் விலைகள் உயர்ந்திருக் கின்றன. இலங்கையின் ஏற்றுமதிகள் பெரும்பாலும் அமெரிக்கா, ஐரோப் பிய நாடுகள், பிரித்தானியா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கே செல்கி றது. இந்த நாடுகள் அனைத்திலும் ஏறத்தாழ அனைத்து வகைப் பொருட் களினதும் விலைகள் அதிகரித்துள்ளன. இந்த நிலையில் இலங்கை ஏற்றுமதி செய்யும் பொருட்களினது விலைகளும் கணிசமாக அதிகரித்திருக்கின்றன.

இந்த ஆண்டின் கடந்த ஆகஸ்ட் மாதம் வரையான ஏற்றுமதிகளை அவ தானித்தால் சென்ற ஆண்டின் இதே காலகட்டத்தோடு ஒப்பிடும் பொழுது அமெரிக்க டொலர் பெறுமதியில் சுமார் 1 பில்லியன் டொலர் அளவுக்கு ஏற்றுமதி வருமான அதிகரிப்பை இலங்கை ஈட்டியிருக்கிறது. இதில் சுமார் 650 மில்லியன் டொலர்கள் அதிகரிப்பை தைத்த ஆடைகளின் ஏற்றுமதியே பெற்றுத் தந்திருக்கின்றது. அடுத்தபடியாக ரத்தினக் கற்களின் ஏற்றுமதி வருமானம் சுமார் 100 மில்லி யன் டொலராலும் கடலுணவு வகை களின் ஏற்றுமதி வருமானம் சுமார் 25 மில்லியன் டொலராலும் அதிகரித்திருக்கின்றன. இக்காலகட் டத்தில் விவசாயப்பண்டங்களினால் பெற்ற வருமானம் மொத்தத்தில் சுமார் 60 மில்லியன் டொலர்களால் வீழ்ச்சிய டைந்திருக்கிறது. இயற்கை விவசாயத் துக்கு மாற்றுதல் என்ற பெயரில் ரசாயனப் பொருட்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டதால் தேயிலை உட்பட இலங்கையின் விவசாயப் பண்டங் களின் உற்பத்தி 20 சதவீதத்துக்கு மேல் வீழ்ச்சியடைந்தது தெரிந்ததே. அத னால் அவை ஒவ்வொன்றினதும் ஏற்று மதியானது தொகைரீதியில் வீழ்ச்சி யடைந்தது. இருந்த போதிலும் அவற்றுக்கு கிடைத்த ஏற்றுமதி விலை சாதகமாக அமைந்ததால் அவை ஒவ் வொன்றினதும் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் பெரிதளவு வீழ்ச்சி ஏற் படவில்லை.

இந்தக் காலகட்டத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களினது சராசரி அலகு விலைச்சுட்டெண் கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் சுமார் 15 சதவீதத்தால் அதிகரித்திருக்கிறது. அதேவேளை, ஏற்றுமதி வருமானம் மொத்தத்தில் டொலர் கணக்கில் 10 சதவீதம் மட்டுமே அதிகரித்திருக்கிறது. இதுவே ஏற்றுமதி வருமானத்தின் அதி கரிப்புக்குக் காரணமாகிறது. இதனை அரசாங்கம் தனது கெட்டித்தனத்தால் ஏற்பட்ட ஏற்றுமதி அதிகரிப்பு போல காட்டிக் கொள்கிறது.



**எத்தனைதான் செய்தாலும் சீராக்க முடியாத சென்மதி நிலுவை**

*17.* பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதியை அரசாங்கம் கணிசமாகக் குறைத்திருக்கிற போதிலும், அதற்கான மொத்தச் செலவு குறையவில்லை. பெற்றோலிய பொருட்களின் உலக விலை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது சுமார் 20 சதவீதம் அதிகமாக உள்ளமையே பிரதானமான காரண மாகும். அதேபோலவே இறக்குமதி செய்யப்படும் உணவுப் பண்டங்கள் உட்பட ஏறத்தாழ இறக்குமதி செய்யப் படும் அனைத்து நேரடி நுகர்வுப் பொருட்களினதும் மற்றும் ஆக்க உற்பத்திகளுக்கான மூலப் பொருட்கள் மற்றும் இடைநிலைப் பண்டங்களின் விலைகளும் கணிசமாக உயர்ந்துள்ளன. இறக்குமதிகளைக் குறைத்தும் தடை செய்தும் இறக்குமதிச் செலவைக் குறைக்க அரசாங்கம் முயலுகின்ற போதிலும், இவ்வளவுக்கும் பிறகும் கூட பொருட்களின் மொத்த இறக்கு மதிச் செலவு சுமார் 10 சதவீதமளவிற்கு மட்டுமே குறைந்திருக்கின்றது. இந்நிலையில் இந்த ஆண்டுக்கான வர்த்தக நிலுவையின் பாதகமான இடைவெளி 6 பில்லியன் டொலர் களை அண்மித்ததாகும். சென்ற ஆண்டு இந்த இடைவெளி 8 பில்லியன் டொலர்களாக இருந்தது. இறக்குமதி களை இதற்கு மேல் குறைத்தால் நாட்டில் எதிர்ப்புகளும் குழப்பங்களும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு ஏற்பட்டு விடும் என்பதை அரசாங்கம் புரிந்து கொண்டே எச்சரிக்கையோடு செயற்படுகிறது.

இந்த ஆண்டுக்கான இடை வெளியை நிரப்ப எப்படியாயினும் வெளிநாடுகளில் வேலை செய்வோர் அனுப்பும் அந்நியச் செலாவணி மற் றும் வெளிநாட்டவர்கள் இலங்கைக்கு வருவதால் கிடைக்கும் அந்நியச் செலாவணி ஆகிய இரண்டையும் கொண்டு சமாளித்து விட வேண்டு மென்றே அரசாங்கம் முழு மூச்சுடன் செயற்படுகிறது. அப்படிப் பார்த்தா லும் சுமார் ஒன்றரை பில்லியனுக்குக் குறையாமல் பற்றாக்குறை ஏற்படும் என்றே தெரிகிறது. அதனை ஈடுகட்டு வதற்குத் தான் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுக்காகபடாத பாடுகிறது. அது கிடைக்க வில்லை யென் றால் அந்நியச் செலாவணிப் பிரச்சினை மேலும் அதிகமாகும்.

அந்நியச் செலாவணி இருப்பு கையைக் கடித்ததாலும், அந்நிய நாடுகளும் சர்வதேச நிறுவனங்களும் கடன் தரும் தமது கைகளை மடக்கிக் கொண்டதாலும் அரசாங்கம் இறக்கு மதிகளைக் குறைக்க வேண்டிய, தடை கள் செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானது. ஒரு நாட்டின் பொருளா தார உறுதிப்பாட்டுக்கும் முன்னேற்றத் துக்கும் அதன் அரசாங்கம் முன் கூட் டியே ஏற்றுமதி அதிகரிப்பையும் இறக்குமதிக் குறைப்பையும் திட்ட மிட்டு செயற்படுத்த வேண்டும். அவ்வாறாக திட்டமிடப்பட்ட செயற் திட்டங்கள் உள்நாட்டு உற்பத்திகளின் அதிகரிப்புக்கும் அதன் மூலமாக வேலைவாய்ப்புகளின் அதிகரிப்புக்கும் அதனூடாக மக்களின் வருமான அதிகரிப்புக்கும் வாழ்க்கைத் தரம் தொடர்ச்சியாக உயர்வதற்குமானதாக அமைய வேண்டும். ஆனால் இங்கு அரசாங்கம் இறக்குமதிகள் விடயத்தில் கட்டாயங்களின் காரணமாக, வேறு வழியில்லை எனும் போது நிலை மையை எப்படி சமாளிப்பது என செயற்படுகிறது.

அரசியல் கட்சிகளின் எதிர்ப்பும் மக்களின் எழுச்சியும் ஆட்சி அதி காரத்தை ஒன்றும் செய்ய முடியாது என்றதொரு நிலையிருந்தால் ஆட்சி யாளர்கள் நாட்டின் நிலத்தையும் கட லையும் வானையும் தங்கு தடையின்றி கூறு போட்டு விற்றாயினும் வெளிநாடு களிடமிருந்து கடன்கடனாக வாங்கி தடையின்றி இறக்குமதிகளைத் தொடர்ந்தே இருப்பார்கள். இப்போது அது முடியாமலிருக்கிறது. மாற்றாக அரசாங்கம் எல்லாப் பாதையிலும் ஓடிப் பார்க்கிறது. ஆனால் ஒரு பாதை யிலிருந்தும் இது வரை வெளிச்சமெது வும் வரவில்லை.

**அதிகார கூட்டம் செழிக்கிறது நாடு வங்குரோத்தில் மிதக்கிறது**

*18.* இறக்குமதித் தடைகளும் குறைப்புகளும் தொடருமேயானால் வேலையின்மையின் அதிகரிப்பும், மக்களின் வருமானத்தினுடைய மெய்யான பெறுமதி வீழ்ச்சியடைவது வும், வறுமையின் அதிகரிப்பும், தேசிய பொருளாதார வீழ்ச்சியும் தொடர் கதையாகும். போசாக்கற்றோரின் தொகை அதிகரிப்பால் இறப்போர் தொகை அதிகரிப்பையும் எதிர்பார்க்க லாம். இது தொடர்பாக ஐக்கிய நாடு கள் சபையின் அமைப்புகள் மட்டு மல்ல, உள்ளூர் சுகாதார மற்றும் மருத் துவ ஆய்வுகளும் கடுமையான எச்சரிக் கைகளை விடுத்துள்ளன.

*2016*ம் ஆண்டின் அரச அறிக்கை களின்படி வறுமைக் கோட்டுக்கு உட்பட்டோர் தொகை சனத்தொகை யில் 3 சதவீதமானோர் என்றே கணக் குக் காட்டியது. ஆனால் இப்போது சனத்தொகையில் 30 சதவீதத்துக்கும் அதிகமானோர் அடிப்படை உணவுப் பாதுகாப்பு அற்றவர்களாகி விட்டதாக கணக்கிடப்படுகிறது. மக்களின் வரு மானத்துக்கும் உணவுப் பண்டங்களின் விலைகளுக்கும் இடையே தொடர்பு படுத்தினால் குறைந்தபட்சமாகவேனும் தேவையான சத்துள்ள உணவுகளை உண்ண முடியா நிலைமைக்கு சனத் தொகையில் 60 சதவீதத்துக்கு மேற் பட்டோர் இருப்பர் என்றே தோன்று கிறது. சனத்தொகையில் பெருந் தொகையினோர் தமது மூன்று நேர உணவை இரண்டு நேரமாக்கி விட்டார் கள் என்றும் கணிசமான சதவீதத்தினர் ஒரு நேரம் மட்டுமே வயிறை நிரப்ப உண்கின்றனர் என்றும் செய்திகள் ஊட கங்களில் வெளிவந்த வண்ணம் உள்ளன.

பள்ளிக்கூடங்களுக்கு பெருந் தொகையான மாணவர்கள் காலை நேர உணவின்றியே செல்லும் நிலை உள்ளது. மாணவர்களுக்கான உணவு வழங்கல் திட்டம் 5ம் ஆண்டு வகுப்பு மற்றும் அதற்கும் குறைந்த வகுப்பு களின் மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. அளவுரீதிலும் சத்துக்கள் ரீதியிலும் போதிய உணவு உண்ண வேண்டிய இளம் பிள்ளைகள் வயிற்றைப் பட்டினியில் வைத்தபடியே படிப்பில் தமது கவனத்தைச் செலுத்த வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப் பட்டுள்ளனர். இந்த நிலைமையின் காரணமாகவே, மதத் தலைவர்கள் பொதுமக்களின் வாழ்க்கை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டிருக்க ஆட்சியில் இருப்பவர்களும் அரசியல் வாதிகளும் செழித்துக் கொண்டிருக்கி றார்கள் என்று குரலெழுப்புகின்றனர். அமைச்சர்களினதும், அரசின் உயர் அதிகாரிகளினதும் அக்கறையும் செயற்பாடுகளும் நாட்டில் மக்கள் படும் பாடுகளையோ, நாட்டின் நெருக்கடியான பொருளாதார நிலைமையையோ பிரதிபலிக்கவில்லை என்பது மட்டும் உண்மை.

(பகுதி 6இல் தொடரும்)

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


- **1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.**

**01.** வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.



(1) (2) (3)

**02.**



(1) (2) (3)

**03.** இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E


**04.** **"பல்கலைக்கழகம்"** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்
(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்
(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்

**05.** சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.
(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.
(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

**06.** உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

**07.** உலக மரபுரிமை மையங்களாக ........................ நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.


(1) யுனிசெப், காலிக்கோட்டை
(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை
(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

01. (3)



02. (1)



03. (3) C, F / B, D / A, E

---

**19.11.2022**
**சனிக்கிழமை**

CHANNEL-1

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

CHANNEL - 2

**19.11.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பணிப்பெண்ணாக சென்ற மகள் உட்பட 90 பெண்களையும் மீட்டுத் தாருங்கள்!

## தாயொருவர் கண்ணீருடன் வேண்டுகோள்

மட்டக்களப்பு, நவ. 19

ஓமானுக்கு வீட்டு பணிப் பெண்ணா சென்று சித்திர வதைக்கு உட்பட்டுவரும் தனது மகள் உட்பட 90 பெண்களை மீட்டுத்தருமாறு ஓட்டமாவடியைச் சேர்ந்த தாய் ஒருவர் கண்ணீருடன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு ஓட்ட மாவடி பாலைநகரைச் சேர்ந்த 51 வயதுடைய 5 பிள்ளைக ளின் தாயாரான முகமது இஸ் மாயில் சித்திக்நிசாவே இவ் வாறு வேண்டுகோள் விடுத் துள்ளார்.

மட்டக்களப்பு ஓட்ட மாவடி பாலைநகரைச் சேர்ந்த 22 வயதுடைய 2 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயாரான முகமது அஸீம் பாத்திமா ஹமீதியாவே இவ்வாறு வெளிநாடு சென்றுள்ளார்.

இலங்கையில் இருந்து தனது மகளை டுபாயில் வீட்டு பணிக்காக அழைத்துச் செல்வ தாக முகவரம் பொய்க்கூறி, ஓமானுக்கு கொண்டு சென்று விற்பனை செய்துள்ள தாயார் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு வேலை வாய்ப்பு பணியகம், 16 தரம் வேலைவாய்ப்பு பணியகம், மனித உரிமை ஆணைக்குழு,



சிறுவர் நன்னடத்தை பிரிவு என கடந்த 9 மாதங்களாக தனது மகளை மீட்பதற்கு நட வடிக்கை எடுத்தும் எவ்வித பல னும் அளிக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

தனது மகள், அவருடன் அங்கு 90பேர் இவ்வாறு சித் திரவதை செய்யப்பட்டுவரு தாக காணொளியொன்றினை அனுப்பியுள்ளதாகவும் கூறி யுள்ளார்.

அதேவேளை அந்த பகுதி யைச் 9, 10 வயது இருபெண் குழந்தைளின் தாயாரான பர்திமா ஸபீரா என்பவரும் கடந்த மூன்று மாதங்களாக எவ்வித தொடர்பும் இன்றி இருப்பதால், அவரையும் மீட்டு தருமாறு அவரது தாயார் கோரிக்கை விடுத்துள் ளார். (அ)

# பழுதான மாட்டிறைச்சி விற்றவருக்கு அபராதம்

அம்பாறை, நவ. 19

பொத்துவில் பிரதேசத்தில் நுகர்வுக்கு பொருத்தமில்லாத பழுதடைந்த மாட்டிறைச்சி விற்பனை செய்த நபர் ஒருவ ருக்கு பொத்துவில் நீதவான் நீதிமன்றினால் 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப் பட்டுள்ளது.

பொத்துவில் பிரதேச மேற் பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ். அப்துல் மலீக் இதை தெரிவித்தார்.

பழுதடைந்த மாட்டிறைச்சி விற்பனை செய்வதாக கடந்த புதன்கிழமை பொது மக்க ளால் கிடைக்கப்பெற்ற தகவ லுக்கமைய பொத்துவில் சுகா தார வைத்தியதிகாரி எம்.எஸ். அப்துல் சமட் தலைமையி லான பொதுச் சுகாதாரப் பரி சோதகர்கள் குழுவினர் மேற் கொண்ட திடீர்ப் பரிசோத னையின்போது நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பழுத டைந்த மாட்டிறைச்சியை விற்பனைக்காக வைத்திருந்த இறைச்சியைக் கைப்பற்றிய தாக அவர் தெரிவித்தார்.

பாவனைக்குதவாத மாட்டி றைச்சியை வைத்திருந்த குற்றச் சாட்டின் பேரில் குறித்த நபருக்கெதிராக பொத்துவில் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதை யடுத்து நீதிமன்றினால் 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக் கப்பட்டுள்ளதோடு கைப்பற் றப்பட்ட மாட்டிறைச்சியை யும் அழித்ததாக அவர் கூறி னார். (அ)



# ஒரு நாள் ஒரு வேலைத் திட்டத்தின் கீழ் விழிப்புலனற்றோர் நிலையத்திற்கு உதவி

அம்பாறை, நவ. 19

“ஒருநாள் ஒரு வேலைத் திட்டம் ” என்ற நிகழ்ச்சித் திட் டத்தின் கீழ் மட்டக்களப்பு கல்லடி உதயம் விழிப்புலனற் றோர் நிலையத்திற்கு நேற்று முன் தினம் உதவி வழங்கப்பட் டது.

கிழக்கின் சமூக செயற்பாட் டாளரும்,காரைதீவு பிரதேச சபை தவிசாளருமான கிருஷ்ண பிள்ளை ஜெயசிறிலின் இத் திட்டத்தின் கீழ் இந்த விஜயம் இடம்பெற்றது.

புலம்பெயர் தேசத்தில் இருக்கக்கூடிய சில தாயகப் பற்றுள்ள பரோபகாரிகளின் உதவியோடு இத்திட்டம் முன் னெடுக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம், உதயம் நிலைய தலைவர் விமல் முன்னிலையில் அவர்களுக்கு நிதிஉதவி வழங்கியதோடு விருந்துபசாரமும் இடம்பெற் றது.

தொடர்ச்சியாக ஒளிவிழா வின் போது உலர்உணவு வழங்குகின்ற நிகழ்ச்சி திட்டத் தையும் முன்னெடுக்க வேண் டும் என்று உதயம் விழிப்புல னற்றோர் சங்க தலைவர் விமல் கேட்டுக் கொண்டதற்கு தவி சாளர் இணங்கினார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் அந்த திட்டம் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதேவேளை . ஒருநாள் ஒரு வேலைத் திட்டம் ” என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெரியநீலாவணை சுனாமி தொடர்மாடி வீட்டுத் தொகுதியிலுள்ள மாற்றுத்திற னாளி குடும்பத்திற்கு நேற்று முன்தினம் உதவி வழங்கப்பட் டது.

மாற்றுத்திறனாளி அஜய் மற்றும் அவரது தாயாரான பெண் தலைமை தாங்கும் குடும்ப தலைவி திருமதி செல்வராஜா அபிதா குடும் பத்திற்கு அரிசி மாவு பருப்பு சீனி தேயிலை பிஸ்கட் பால் மா கடலைப்பருப்பு உள் ளிட்ட பல உணவுப் பொருட் கள் வழங்கப்பட்டன.

தமக்கு முடியுமானால் வாழ்வாதார உதவி செய்யு மாறு குடும்பத்தலைவி அபிதா வேண்டுகோள் விடுத்தார்.

கோரிக்கைக்கு விரைவில் தீர்வு தரப்படும் என சமூக சேவையாளர் ஜெயசிறில் உறுதியளித்தார். (அ)



# களுவாஞ்சிக்குடியில் குருதிக்கொடை நிகழ்வு

மட்டக்களப்பு, நவ. 19

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக ஊழி யர் நலன்புரிச் சங்கத்தின் ஏற் பாட்டில் வருடாந்தம் ஒழுங்கு செய்து நடாத்தப்படும் இரத்த தான நிகழ்வானது இவ் வரு டம் 5ஆவது தடவையாக சிறப்பான முறையில் ஒழுங்கு செய்து நடத்தப்பட்டது.

களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை மற்றும் மட் டக்களப்பு போதனா வைத்திய சாலை இரத்த வங்கியுடன் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வானது பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமை மற்றும் வழிகாட்டு தலில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற் றது.

பிரதேச செயலக உத்தி யோகத்தர்கள், விளையாட்டு கழகங்கள், இளைஞர் கழகங் கள் , கிராம அபிவிருத்தி சங் கங்கள், மாதர் கிராம அபிவி ருத்தி சங்கங்கள் மற்றும் பொது மக்கள் என நூற்றுக்கும் அதிக மானோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு குருதிக் கொடை வழங்கினர் .

இவ் இரத்ததான நிகழ்வா னது பிரதேச செயலாளர் திரு மதி சிவப்பிரியா வில்வரத் னம் தலைமை மற்றும் வழி காட்டு தலில் பிரதேச செயலக நலன் புரிச் சங்கத்தினரின் ஒத்துழைப் புடன் தொடர்ச்சியாக 5ஆவது தடவையாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் தகவல்கள் முகாமைத்துவ தரவுத்தளம் அங்குரார்ப்பணம்

திருமலை, நவ. 19

கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் தகவல்கள் முகாமைத்துவ தரவுத்தளம் உத்தியோகபூர்வமாக அங்கு ரார்ப்பனம் செய்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை மாகாண பிரதிப் பிரதம செயலக கூட்ட மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலா ளர் (திருமதி) கலாமதி பத்மராஜா தலைமை யில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பிரதம அதிதியாக கலந்துகொண்டு ஆரம் பித்து வைத்தார்.

இதன்போது, கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் நாகராஜா தனஞ்ஜெயனினால், தகவல்கள் முகாமைத்துவ தரவுத்தளம் ஆரம் பித்து வைக்கப்பட்ட நோக்கம் பற்றியும், தரவுத் தளத்தில் எவ்வாறு உள்நுழைவது மற்றும் பதிவு களை எவ்வாறு பதிவிடுவது பற்றிய முழுமை யான தகவல்களை அதிதி உள்ளிட்ட மாகாண அமைச்சின் செயலாளர்கள் மற்றும் மாகாண திணைக்களத் தலைவர்கள், உத்தியோகத் தர்களுக்கு மிக விரிவாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில், ஆளுநர் செயலக செயலாளர்



எல்.பி.மதநாயக்க, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே. முரளிதரன், வீதி அபிவிருத்தி அமைச்சின் செய லாளர் ஏ.எச்.எம்.அன்சார், விவசாய அமைச்சின் செயலாளர் எல்.கே.ஜி.முத்துபண்டா, பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஏ.மன்சூர், பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) திருமதி ஆர்.யூ.ஜெலீல், பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) என்.தமிழ்ச்செல் வன், பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) எஸ். குலதீபன் உள்ளிட்ட மாகாண திணைக்களத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் பலர் கலந்துகொண்டனர். (அ)

# 10 மில்லியன் உக்ரைனியர்கள் மின்சாரம் இல்லாமல் உள்ளனர்!

## ரஷ்யாவின் புதிய ஏவுகணைத் தாக்குதல்களால்



கீவ், நவ. 19

ரஷ்யாவின் புதிய ஏவுகணைத் தாக்குதல்களால் 10 மில்லியன் உக்ரைனியர்கள் மின்சாரம் இல்லாமல் இருப்பதாக ஜனாதிபதி வோலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

சமீபத்திய ஏவுகணைத் தாக்குதல்களில் குறைந்தது ஏழு பேர் உயிரிழந்தனர். இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

இதனிடையே மின்சாரத்தை மீட்டெடுப் பதற்கான அத்தனை நடவடிக்கைகளுமன் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி வோலோடிமிர் ஸெலென்ஸ்கி தனது இரவு உரையில் கூறினார்.

உக்ரைனின் வான் பாதுகாப்பு அமைப்பு, 6 கப்பல் ஏவுகணைகள் மற்றும் ஐந்து ஆளில்லா விமானங்களை சுட்டு வீழ்த்தியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை தெற்கு நகர மான சபோரிஸியாவிற்கு அருகிலுள்ள வில்னியன்ஸ் கில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் ஏவுகணை தாக்கியதில் 7 பேர் உயிரிழந்ததாக உக்ரைன் ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

கிழக்கில் ஒரு எரிவாயு உற்பத்தி ஆலை மற்றும் டினிப்ரோவில் ஒரு ஏவுகணை தொழிற்சாலை ஆகியவை சமீபத்திய இலக்குகளில் அடங்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

முக்கியமாக தலைநகர் கீவ், மேற்கு நகரமான வின்னிட்சியா, தென்மேற்கில் உள்ள துறைமுக நகரமான ஒடேசா மற்றும் வடகிழக்கில் சுமி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது. (அ)



# ஏவுகணை தொழிற்சாலை மீது உக்ரைனில் ரஷ்யா தாக்குதல்!

கீவ், நவ. 19

உக்ரைனின் டினிப்ரோவில் எரிவாயு உற்பத்தி நிலையம் மற்றும் ஏவுகணை தொழிற்சாலை ஆகியவை மீது ரஷ்யா இராணுவம் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸபோரிஸியா பகுதியில் குடியிருப்பு கட்டடங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின் விளைவாக நான்கு பேர் இறந்ததாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

சமீபத்திய வாரங்களில், தொடர்ச்சியான போர்க்கள பின்னடைவைத் தொடர்ந்து, ரஷ்யாவின் முக்கிய தாக்குதலாக இது பார்க்கப்படுகின்றது. எனினும், இந்த தாக்குதல்கள் குறித்து ரஷ்யா இதுவரை எந்த தகவலும் தெரிவிக்கவில்லை

இதற்கிடையில், உக்ரைனின் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றான டினிப்ரோவை ஏவுகணைகள் தாக்கியதாக பிராந்திய தலைவர் கூறினார். இதனால், ஒரு தொழில்துறை வளாகத்தில் ஏற்பட்ட தீயினால் 14பேர் காயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏவுகணைகள் மற்றும் பிற தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் நகரின் பிவ்டென்மாஷ் தொழிற்சாலை குண்டு வீச்சுக்கு உட்படுத்தப்பட்டது என்று பிரதமர் கூறினார்.

நிகோபோல் நகரைச் சுற்றி 70 குண்டுகள் வீசப்பட்டதாகவும் இந்த குண்டுகள் உள்கட்டமைப்பை சேதப்படுத்தியதாகவும், ஆயிரக்கணக்கான வீடுகளுக்கு மின்சாரம் மற்றும் தண்ணீருக்கு தடையை ஏற்படுத்தியதாகவும் கூறப்படுகின்றது.

அதிகாரிகளின் புதுப்பிப்புகளின்படி, ஒடேசா மற்றும் கார்கிவ் பிராந்தியங்களில் அதிக உள்கட்டமைப்பு இலக்கு வைக்கப்பட்டது, ஒவ்வொரு இடத்திலும் மூன்று பேருக்கு காயங்கள் ஏற்பட்டன. (அ)

# இஸ்ரேலும், மேற்குலகும் ஈரானில் உள்நாட்டு போரை தூண்டுகின்றன!

## வெளிவிவகார அமைச்சர் குற்றச்சாட்டு



தெஹ்ரான், நவ. 19

ஈரானில் அரச எதிர்ப்பு போராட்டங்களின் மத்தியில் இஸ்ரேல், மேற்கத்திய உளவுத்துறையும் நாட்டை பிளவுபடுத்தி உள்நாட்டுப் போரைத் தொடங்க திட்டமிட்டுள்ளதாக அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் குற்றம் சாட்டினார்.

தென்மேற்கு நகரமான இசேயில் நடந்த பயங்கரவாத தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்ட பயங்கரவாத தாக்குதல் நடந்த ஒரு நாளின் பின் இந்த கருத்து வெளியாகியுள்ளது.

“பல்வேறு பாதுகாப்பு சேவைகள், இஸ்ரேல் மற்றும் சில மேற்கத்திய அரசியல்வாதிகள் உள்நாட்டுப் போர், அழிவு மற்றும் ஈரானின் சிதைவு ஆகியவற்றிற்கான திட்டங்களை வகுத்துள்ளனர், ஈரான் லிபியா அல்லது சூடான் அல்ல என்பதை அறிந்து கொள்ள வேண்டும். ஈரானியர்கள் அத்தகைய திட்டங்களுக்கு விழ மாட்டார்கள்.” என்று ஹொசைன் அமிரப்டோல்லாஹியன் ருவீட் செய்துள்ளார்,

ஈரானிய இளம் குர்திஷ் பெண் மஹ்சா அமினி இஸ்லாமிய ஆடைக் குறியீட்டை மீறியதாகக் கூறி அறநெறிப் பொலிசார் கைது செய்ததை தொடர்ந்து, செப்டம்பர் 16ஆம் திகதி உயிரிழந்தார். அதையடுத்து, நாடு முழுவதும் அமைதியின்மையைத் தூண்டிவிட்டதாக தெஹ்ரான் மேற்கத்திய எதிரிகளை குற்றம் சாட்டுகிறது.

கடந்த புதன்கிழமையன்று நடந்த தனித்தனி வன்முறையில், மோட்டார் சைக்கிளில் சென்ற துப்பாக்கிதாரிகள் இஸ்பஹானில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த பலரைச் சுட்டுக் கொன்றனர், இரண்டு பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 8 பேர் காயமடைந்தனர்.

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களின் போது பிரெஞ்சு உளவுத்துறை முகவர்கள் கைது செய்யப்பட்டதாக இஸ்லாமிய குடியரசு கூறியதை அடுத்து, கடந்த புதன்கிழமை ஈரான் தங்கள் நாட்டு மக்களை அச்சுறுத்துவதாக பிரான்ஸூம் பிரிட்டனும் குற்றம் சாட்டின.

1979 புரட்சிக்குப் பின்னர் ஈரானின் மதகுரு தலைமைக்கு இந்த எதிர்ப்புக்கள் தைரியமான சவால்களில் ஒன்றாக மாறியுள்ளன. (அ)

# தாமரைக்குளம் பூங்காவில் நடைபெற்ற ஜி-20 மாநாடு

## இந்து மதத்தை பெருமைப்படுத்திய இந்தோனேசிய அரசு

ஜகார்த்தா, நவ. 19

தென்கிழக்கு ஆசியாவில் அமைந்துள்ள இந்தோனேசியாவில் 27.64 கோடி மக்கள் வசிக்கின்றனர். இதில் 87 சதவீதம் பேர் முஸ்லிம்கள் ஆவர். அந்த நாட்டின் ஒரு மாகாணம் பாலி. இந்த தீவில் இந்துக்கள் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். அதாவது பாலி தீவின் மக்கள் தொகையில் 95 சதவீதம் பேர் இந்துக்கள் ஆவர்.



கடந்த 15ஆம், 16ஆம் திகதிகளில் பாலி தீவின் நூசா துவா பகுதியில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் ஜி-20 அமைப்பின் மாநாடு நடைபெற்றது. கடந்த 15ஆம் திகதி ஜி-20 நாடுகளின் தலைவர்கள், பிரதிநிதிகளுக்கு பாலியின் பதுங் அருகே 60 ஹெக்ரேயர் பரப்பளவில் அமைந்துள்ள கருட விஷ்ணு காஞ்சன பண்பாட்டு பூங்காவில் பிரம்மாண்ட விருந்து அளிக்கப்பட்டது. இந்த பூங்காவில் 122 மீற்றர் உயரத்தில் கருட வாகனத்தில் அமர்ந்திருக்கும் விஷ்ணு சிலை உள்ளது. இதுதான் இந்தோனேசியாவின் மிக உயரமான சிலையாகும். இந்த பூங்காவில் அழகிய தாமரைக் குளமும் உள்ளது.

இதுகுறித்து பூங்காவின் இயக்குநர் ஸ்டீபானஸ் யோனதான் கூறும்போது, “இந்து கடவுள் விஷ்ணுவுக்காக அரசு சார்பில் இந்த பூங்கா உருவாக்கப்பட்டது. பூங்காவில் கருட வாகனத்தில் விஷ்ணு வீற்றிருக்கும் சிலை இந்தோனேசியாவின் அடையாளம் ஆகும். ஜி20 மாநாட்டின்போது சுமார் 400 முக்கிய பிரமுகர்களுக்கு பூங்காவின் தாமரை குளம் பகுதியில் இரவு விருந்து அளிக்கப்பட்டது. சுமார் 200 க்கும் மேற்பட்ட கலைஞர்கள் இந்து இதிகாச நாடகங்களை அரங்கேற்றினர்” என்று தெரிவித்தார். இரவு விருந்து தொடக்கத்தில் இந்தோனேசிய அதிபர் ஜோகோ விடோடோ பேசும்போது, “விஷ்ணுவின் சிலை அன்பு, பொறுப்புணர்வு, வீரம், தெயவீகத்தின் அடையாளம் ஆகும். ஒட்டு

மொத்த உலகமும், மனிதகுலமும் ஒற்றுமையாக வாழ வேண்டும்” என்றார்.

இந்து மதத்தை இந்தோனேசிய அரசு பெருமைப்படுத்தியது சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (அ)



## ரென்னிஸ் சம்பியன்ஷிப் அரையிறுதியில் பிரிட்ஸ்

துரின், நவ. 19

உலக தரவரிசையில் முன்னணியில் இருக்கும் முதல்நிலை-8 வீரர்கள் மட்டும் பங்கேற்கும் ஏ. ரி. பி. இறுதிச் சுற்று எனப்படும் ஆண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி இத்தாலியின் டுரின் நகரில் நடந்து வருகிறது.

இந்த போட்டியில் பங்கேற்றுள்ள வீரர்கள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பிரிவில் உள்ள வீரர்கள், தங்கள் பிரிவில் உள்ள மற்ற வீரர்களுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் வீரர்கள் அரையிறுதிக்கு தகுதி பெறுவார்கள்.

இதில் நேற்று நடைபெற்ற போட்டியில்அமெரிக்க வீரர் ரெய்லர் பிரிட்ஸுடன் கனடா வீரர் அகர் அலியாசிம் மோதினார். இந்த போட்டியின் 3 செற்களில் 7-6, 6-7, 6-2 என்ற கணக்கில் டெய்லர் பிரிட்ஸ் வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தார்.

இதையடுத்து அரையிறுதியில் நோவாக் ஜொகோவிச்சை ரெய்லர் பிரிட்ஸ் எதிர்கொள்கிறார். (ஐ)

## கிறீன் ஐ. பி. எல்லில் விளையாட தடையாக இருக்கமாட்டேன்!

### பட் கம்மின்ஸ்




சிட்னி, நவ. 19

சகலதுறை வீரர் கமரூன் கிறீன் ஐ. பி. எல். போட்டியில் விளையாடுவதைத் தடுக்கமாட்டேன் என அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் கூறியுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் ஆட்டத்தை 6 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது அவுஸ்திரேலிய அணி. ஐ. பி. எல். போட்டியில் வீரர்களுக்கான ஏலம் டிசெம்பர் 23 அன்று நடைபெறவுள்ளது. 2023 ஐ. பி. எல். போட்டியில் பங்குபெறப் போவதில்லை என அவர் சமீபத்தில் அறிவித்தார்.

இந்நிலையில் ஆஸியின் சகலதுறை வீரர் கமரூன் கிறீன் ஐ. பி. எல். போட்டியில் விளையாடுவது பற்றி கம்மின்ஸ் கூறியதாவது:

ஐ. பி. எல். ஏலத்தில் கிறீன் பங்குபெறுவார் என நினைக்கிறேன். ஏலம் நடக்க இன்னும் கொஞ்ச நாள்கள் இருக்கின்றன. சுயநலம் கொண்ட தலைவராக, கிறீன் தன்னுடைய ஆற்றலையெல்லாம் அவுஸ்திரேலிய அணிக்காக செலவிட வேண்டும் என்றே எண்ணுவேன். ஆனால், அதுபோன்ற ஒரு வாய்ப்பு வரும் போது அதை வேண்டாம் எனச் சொல்லிவிடு என அவரிடம் நான் எப்படிக் கூற முடியும் என்று கூறியுள்ளார். (ஐ)

# நியூசிலாந்து - இந்தியா முதல் போட்டி நிறுத்தம்!

வெலிங்டன், நவ. 19

இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையே நேற்று நடைபெற இருந்த இருபது - 20 போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது. இந்தப் போட்டி நியூசிலாந்தின் வெலிங்டன் நகரில் அமைந்துள்ள ஸ்கை கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற இருந்தது.

இந்திய கிரிக்கெட் அணி, நியூசிலாந்து நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் தொடர்களில் விளையாடுகிறது. இந்த பயணத்தில் 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 மற்றும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர்கள் அடங்கும். இதில், இருபது - 20 தொடர் முதலில் நடைபெறுகிறது. இந்தத் தொடரின் முதல் போட்டிதான் இப்போது மழை காரணமாக ஒரு பந்து கூட வீசப்படாமல் கைவிடப்பட்டுள்ளது.

“வீரர்கள் அனைவரும் இந்தத் தொடரில் விளையாட மிகவும் ஆர்வமாக உள்ளனர். கிரிக்கெட் விளையாட நியூசிலாந்து சரியான இடம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக இன்று (நேற்று) விளையாட முடியவில்லை. எங்கள் அணியில் உள்ள வீரர்கள் இளையவர்களாக இருக்கலாம். ஆனால், அனுபவத்தில் அல்ல. இவர்கள் அனைவரும் நிறைய ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் விளையாடிய அனுபவம் கொண்டவர்கள். சிலர்




சர்வதேச போட்டிகளிலும் விளையாடி உள்ளனர். நிச்சயம் இந்தத் தொடர் புதியவர்களுக்கான நல்வாய்ப்பாக அமையும் என கருதுகிறேன்.” என இந்திய அணியின் தலைவர் ஹார்திக் பாண்ட்யா தெரிவித்துள்ளார்.

இந்தத் தொடரில் இந்திய அணியின் மூத்த வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. அதனால், இளம் வீரர்கள் அடங்கிய அணியை பாண்ட்யா வழிநடத்துகிறார். இந்தத் தொடரின் அடுத்த இருபது - 20 போட்டி வரும் நாளை நடைபெறவுள்ளது. (ஐ)



## ருகுணை பல்கலையை வீழ்த்தியது கொழும்பு!

கொழும்பு, நவ. 19

ருகுணை பல்கலைக்கழகத்தை 9 விக்கெட்களால் வெற்றி கொண்டது கொழும்பு பல்கலைக்கழக அணி.

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடக்கிறது. இதில், நேற்று முன்தினம் நடந்த போட்டியில், ருகுணை பல்கலைக்கழகமும் கொழும்பு பல்கலைக்கழகமும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ருகுணை பல்கலைக்கழகம் 32.1 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றது.

ஹர்சன் டி சொய்சா 23, விஸ்வ தனஞ்சய 19, ருக்ஷிக ஜெயரத்ன 16 ஆகியோரே அதிகபட்சி ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் அசத்திய கொழும்பு பல்கலைக்கழக அணியின் ருவின் செனவிரத்ன 3 விக்கெட்களை அதிகபட்சமாக வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொழும்பு பல்கலைக்கழக அணிக்கு தொடக்கம் கொடுத்த தக்சித லெனடோரா ஓட்டம் எதையும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

ஆனால், மற்றோர் தொடக்க வீரரான புபுது பண்டாரவுடன் இணைந்த வசந்தன் ஜதுசன் அதிரடியாக ஆடினார். இருவரின் அபாரமான துடுப்பாட்டத்தால் 16.2 ஓவர்களில் 106 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்களால் வெற்றி கொண்டது.

புபுது பண்டார 34 ஓட்டங்களையும், வசந்தன் ஜதுசன் 3 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 60 ஓட்டங்களைப் பெற்றனர். (ஐ)

### உலகக் கிண்ண பயிற்சி போட்டி:

## ஆர்ஜென்ரீனா கோல் மழை; அரபு எமிரேட்ஸ் தோல்வி!

அபுதாபி, நவ. 19

மெஸ்ஸி உள்ளிட்ட ஆர்ஜென்ரீனா அணி வீரர்கள் கோல் மழை பொழிந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸை படுதோல்வி அடையச்செய்தனர்.

உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடர் நாளை கட்டாரில் ஆரம்பமாகிறது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் அபுதாபியில் நடந்த பயிற்சி போட்டியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸும் மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜென்ரீனா அணியும் மோதின.

இந்த போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஆர்ஜென்ரீனா அணி வீரர்கள் கோல் மழை பொழிந்தனர்.

இறுதியில் ஆர்ஜென்ரீனா அணி 5-0 என்ற கோல் கணக்கில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. ஆர்ஜென்ரீனா

அணி தரப்பில் ஏஞ்சல் டி மரியா இரண்டு கோல்களும், லயனல் மெஸ்ஸி, ஜூலியன் அல்வாரெஸ் மற்றும் ஜோக்வின் கொரியா ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். (ஐ)



# தனுஷ்கவின் பிணைப் பணமாக 150,000 டொலர் செலுத்திய பெண்!

கொழும்பு, நவ. 19

பாலியல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள இலங்கை கிரிக்கட் வீரர் தனுஷ்க குணதிலகவுக்கு அவுஸ்திரேலியாவில் உள்ள வசதி வாய்ந்த இலங்கையர்கள் உதவுவதற்கு முன்வந்துள்ளனர்.

அதற்கமைய, மெல்பேர்னில் உள்ள இலங்கை பெண்ணொருவர் தனுஷ்கவின் பிணைக்காக செலுத்தவேண்டிய 150,000 டொலர்களை தனியாகச் செலுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தனுஷ்கவுக்கும் அந்த பெண்ணுக்குமான உறவுமுறைகள் குறித்தோ, அல்லது தனுஷ்கவின் ரசிகையா என்பது தொடர்பில் இதுவரையில் தகவல்கள் வெளியாகவில்லை.

அத்தோடு, அவுஸ்திரேலியாவில் உள்ள தனுஷ்க குணதிலக்கவுக்கு தங்குமிட வசதிகளையும் அங்குள்ள இலங்கையர்கள் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளதாக அறியமுடிகிறது.

மேலும், தனுஷ்கவின் சட்டத்தரணிக்கான கட்டணத்தையும் இவர்களே செலுத்திவருவதாக கவும் கூறப்படுகிறது. (அ)

# ஐஸ் போதைப்பொருளுடன் திருமலையில் ஒருவர் கைது

திருமலை, நவ. 19

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 22 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் பயாஸ் ரஸாக் நேற்று உத்தரவிட்டார்.

சமன்புர,திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் ஐஸ் போதைப் பாவனைக்கு அடிமையானவர் என்பதோடு திருகோணமலைப் பகுதியில் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கிளிநொச்சி டிப்போ சந்தி கொலை; சந்தேக நபர் கொழும்பில் கைது!

கொழும்பு, நவ. 19

கடந்த ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி கிளிநொச்சி டிப்போ சந்திப்பகுதியில் இடம்பெற்ற கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட விசேட குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

மதுபோதையில் நண்பர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறியதில் வட்டக்கச்சி - கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த ஜெயசீலன் ஜெயகரன் (வயது-33) என்ற நபர் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இரும்புக் கம்பி, கொட்டான்களால் தாக்கியும், கல்லால் எறிந்தும் கொல்லப்பட்டிருந்தார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டதாக ஆறு சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும் அவர்கள் தற்போது தலைமறைவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் தேடப்பட்டு வந்த ஒரு நபர் கொழும்பு - 13 கதிரேசன் வீதி பகுதியில் ஒளிந்திருப்பதாக கிளிநொச்சி மாவட்ட விசேட குற்றத்த தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் பாரதிபுரம் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய அச்சுக்குட்டி என அழைக்கப்படுபவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. விசாரணை நிறைவு பெற்றதும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேக நபரை ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# டயானா கமகேயின் எம்.பி பதவிக்கு எதிரான வழக்கு விசாரணை நவ. 28

கொழும்பு, நவ. 19

இராஜாங்க அமைச்சர் டயானா கமகேயின் பாராளுமன்ற உறுப்புரிமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை எதிர்வரும் நவம்பர் மாதம் 28 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான சோபித ராஜகருணா மற்றும் தம் மிக்க கணேபொல ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, இராஜாங்க அமைச்சர் டயானா கமகே வெளிநாட்டுப் பிரஜாவுரிமையைப் பெற்றுள்ளதாகவும், எனவே அவர் பொறுப்பு வகிக்கும் பதவியை வகிக்க அனுமதிக்கக்கூடாது எனவும் குறிப்பிட்டார்.

எனவே, இந்த வழக்கை மிக முக்கியத்துவத்துடன் பரிசீலிக்க வேண்டும் என்றும், மனுவை பரிசீலிப்பதற்கான திகதியை விரைவில் வழங்க வேண்டும் என்றும் சட்டத்தரணி கேட்டுக் கொண்டார்.

இதன்படி, இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மற்றும் ஏனைய பிரதிவாதிகளை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்புமாறு மனுதாரர்களுக்கு நீதிபதிகள் அறிவித்துள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் பாராளுமன்ற பதவியை நீக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் செயற்பாட்டாளர் ஓஷல ஹேரத்தினால் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் கமகே, குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர், பொது பாதுகாப்பு அமைச்சர், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர், தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற பொதுச் செயலாளர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பிரித்தானிய குடியுரிமை பெற்றுள்ளதாகவும், நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம், அத்தகைய நபர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க தகுதியற்றவர் எனவும் மனுதாரர் கோரியுள்ளார்.

எனவே, இராஜாங்க அமைச்சர் கமகே பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கத் தகுதியற்றவர் என்பதைத் தீர்மானித்து அதனை இரத்துச் செய்து ஆணை பிறப்பிக்குமாறு ஓஷல ஹேரத் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் கோரினார்.

இராஜாங்க அமைச்சர் கமகேயின் குடியுரிமை தொடர்பான அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பிக்குமாறு குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவிடுமாறும் மனுதாரர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளார். (அ)

# மஹிந்தவின் பிறந்தநாளையொட்டி நேற்று விசேட சமய வழிபாடுகள்



கொழும்பு, நவ. 19

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று தனது 77 ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாடினார்.

இதன்போது அவர் தனது மனைவி மற்றும் குடும்பத்தாருடன் மத வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இந்நிலையில், மஹிந்த ராஜபக்ஷவுக்கு அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட பலரும் தமது வாழ்த்துக்களை தெரிவித்தனர். (அ)



# ரணிலின் நேசக்கரம்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தயாரில்லாத பட்சத்தில் பேசுவதில் எந்த அர்த்தமும் இல்லை என்பது பொன்னம்பலத்தின் கருத்தாக இருக்கிறது.

ஜனாதிபதி விக்கிரமசிங்கவுடன் பாராளுமன்றத்தில் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து நினைவுபடுத்திய பொன்னம்பலம், சமஷ்டி முறையை அவர் நிராகரித்துவிட்டார் என்று கூறினார். “அதனால் ஜனாதிபதியுடன் நாம் எதை பேசப்போகிறோம்? தனது அரசாங்கம் நியாயப்பாடும் உறுதிப்பாடும் கொண்டது என்றும் சகல தரப்புகளுடனும் தான் பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருப்பதாகவும் உலகிற்கு காண்பிக்க அவர் விரும்புகிறார். அதனால் பேச்சுவார்த்தை மேசையில் நாம் இருக்கவேண்டியது அவருக்கு தேவையாகவுள்ளது. தமிழர் பிரச்சனைக்கு தீர்வைக் காணப்போவதாக அளிக்கும் உறுதிமொழியில் ஜனாதிபதி உண்மையாகவும் நேர்மையாகவும் இருப்பாரானால், அந்த பேச்சுவார்த்தைக்கான முன்னிபந்தனை சமஷ்டி முறையாகவே இருக்கவேண்டும். அது பற்றி அவர் வெளிப்படையானவராக இருக்கவேண்டும். சிங்கள மக்களுக்கு பொய் கூறக் கூடாது“ என்று பொன்னம்பலம் ‘த இந்து’ வுக்கு கூறினார்.

தமிழ் கட்சிகளுக்கு ஜனாதிபதி விடுத்த அழைப்பு குறித்து அவர் பெரும் உற்சாகத்தை காட்டவில்லை என்ற போதிலும் இவ் வருடத்தைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி இலங்கை உள்மனச் சோதனையைச் செய்வதற்கும் நீண்டகாலமாக தீர்க்கப் படாமல் இருக்கும் தமிழர்களின் பிரச்னையை தீர்க்கமான முறை யில் அணுகுவதற்கும் மெய்யான வாய்ப்பொன்றைக் கொடுத்தி ருக்கிறது என்று சொன்னார்.

“தாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டதாக தென்னிலங்கை மக்கள் உணர்கிறார்கள். தங்களது பெயரில் தலைவர்கள் போரை முன்னெடுத்ததை ... தங்களது பெயரில் தலைவர்கள் இனவாத அரசியலை முன்னெடுத்ததை ..... கண்ட சிங்கள மக்கள் இலங்கை சுதந்திரமடைந்த 1948 ஆம் ஆண்டுக்கு பிறகு முதற்தடவையாக தங்களுக்கு தலைவர்கள் கூறியவற்றை கேள்விக்குள்ளாக்கியிருக்கிறார்கள். ஒரு நாடு என்ற வகையில் நாம் சேர்ந்து செயற்பட முடியுமானால் நிலவரங்களை நிச்சயமாக சரி செய்யமுடியும்” என்று பொன்னம்பலம் கூறினார்.

(த இந்து நவம்பர் 18, 2022)

## வடமராட்சி...

கோவிலடி மீன்பிடி சங்கத்தை சேர்ந்த மீனவர் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளார்.

மீனவரின் படகு பகுதியளவில் சேத மடைந்ததுடன், பலரின் வலைகளும் அறுத்து சேதமாக்கப்பட்டன. இதனால் தமக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ள தாக மீனவர்கள் தெரிவித்தனர். (ஐ)

## கடலுக்கு...

காப்பான இடங்களுக்கு செல்லுமாறும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு வங்கக்கடலிலும் அதனை அண்டிய வடக்கு அந்தமான் கடல் பிராந்தியத்திலும் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாற்றமடையலாம்.

இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடமேற்கு திசையில் நகர்ந்து, நாட்டின் வடக்கு கரையை நோக்கி நகரக்கூடிய சாத்தியம் அதிகம் காணப்படுகிறது என்று கூறப்படுகிறது.

இதனால் வடக்கு மற்றும் கிழக்கு கடல் பரப்புகளில் காற்றின் வேக மானது மணிக்கு 60 கிலோமீற்றர் வரை அதிகரித்து வீசுமென அறிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை, காங்கேசன்துறை தொடக்கம் முல்லைத்தீவு ஊடாக திரு கோணமலை வரையான கடற்பரப்பு களில் 2 தொடக்கம் 3 மீற்றர் வரை கடல் அலைகள் மேல் எழலாம் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ஐ)

## கண்ணீர்குண்டு...

தடுத்து வைக்கப்பட்டு நேற்றுடன் 90 நாட்கள் நிறைவடைந்தன. இதை முன் னிட்டே இந்தப் போராட்டங்கள் நடத் தப்பட்டன.

கறுவாதோட்டம் பொலிஸ் நிலை யம் முன்பாக, பிளவர் வீதியிலுள்ள பிரதமர் அலுவலகம் அருகே, நாரஹன் பிட்டியிலுள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸ் அலுவலகம் அருகில்,, தும்முல்லையிலுள்ள ஐ. நா. வளாகம், தாமரைத் தடாகம் என முக்கிய பகுதி களில் போராட்டங்கள் நடைபெற்றன.

இதேபோன்று, பௌத்தலோக மாவத்தையில் ஆரம்பமான பேரணி பம்பலப்பிட்டிக்கு சென்று அங்கிருந்து கொள்ளுப்பிட்டிவரை சென்றது.

அருகேயும் நேற்று போராட்டங்கள் இடம்பெற்றன.

இவற்றில், பிரதமர் அலுவலகம் அரு கிலும், நாரஹன்பிட்டி, நெலும் பொக் குண - ஹோர்டன் பிளேஸ் ஆகிய இடங் களில் நடைபெற்ற போராட்டங்கள் தண்ணீர் தாரை பிரயோகம் செய்யப் பட்டும் கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டும் கலைக்கப்பட்டன.

பிரதமர் அலுவலகம் அருகே நடை பெற்ற போராட்டம் கலைக்கப்பட்ட நிலையில், அங்கிருந்தவர்கள் விகாரமா தேவி பூங்கா வளாகத்தில் போராட்டத் தில் ஈடுபட்டனர். இதன்போது ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நாரஹன்பிட்டியில் போராடியவர் கள் கலைக்கப்பட்ட நிலையில், அவர் கள் வெலிக்கடை சிறை முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு போராடியவர்களும் பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டமையை அடுத்து அங் கிருந்து கலைந்துசென்றனர்.

இதேசமயம், வசந்த முதலிகே, சிறீ தம்மதேரர் ஆகியோர் இந்த வாரம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் கிடைக்கும்வரை அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு மேல திக நீதிவான் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமைச்சர்களுக்கான வரப்பிரசாதங்களை குறைத்து மக்களுக்கு நிவாரணமளியுங்கள்!

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, நவ. 19

நாடு வங்குரோத்து நிலை அடைந்து விட்டது,மக்கள் பட்டினியால் வாடு கிறார்கள் என்பதை அறியாமல் ஜனா திபதி அமைச்சரவை அமைச்சுக்களை விரிவுபடுத்த முயற்சிக்கிறார். நாட்டு மக்களின் தவறால் பொருளாதாரம் பாதிக்கப்படவில்லை, மக்களாணை இல்லாத அரசாங்கத்துக்கு மக்கள் படும் துயரம் தெரியாது. ஆகவே, அமைச் சர்களின் வரப்பிரசாதங்களை குறைத் தாவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிச்சயம் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்தன வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான பொதுஜன பெரமுன அரசாங்கத்திற்கு மக்களாணை சிறிதள வும் கிடையாது. தற்போதைய பொரு ளாதார பாதிப்பிற்கு இதுவரை ஆட்சி யில் இருந்த அரசாங்கங்கள் பொறுப் புக் கூற வேண்டும் என ஆளும் தரப்பி னர் குறிப்பிடுவது முற்றிலும் தவறு, ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு செல்லும் தீர்மானத்தை எடுக்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ எவ்வித தூரநோக்கமற்ற வகையில் இரசாயன உரம் இறக்குமதி மற்றும் பாவனைக்கு தடை விதித்தார். தமது விவசாய நடவடிக்கைக்கு தேவை யான உரத்தை வழங்குமாறு விவசாயி கள் வீதிக்கு இறங்கி போராடினார்கள். உரம் வழங்காவிடின் நாடு மிக மோச மான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என விவசாயிகள் நாட்டு பற்று டன் அரசாங்கத்திடம் வலியுறுத்தினார் கள். ஆனால் விவசாயிகளின் கருத்துக்கு அப்போதைய ஜனாதிபதி மற்றும் அர சாங்கம் மதிப்பளிக்கவில்லை.

உரம் பற்றாக்குறையால் முழு விவசாயத்துறையும் பாதிக்கப்பட்டது. நாட்டின் உணவு பாதுகாப்பு கேள்விக் குள்ளாக்கப்பட்டது. அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான கேள்வி உயர்வடைந்ததை தொடர்ந்து அத்தி யாவசிய பொருட்களின் விலை சடுதி யாக அதிகரித்தது, பண வீக்கம் துரித மாக அதிகரித்தது.

இலங்கையின் பொருளாதாரம் மோசமான நிலை நோக்கி செல்கிறது என தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங் கள் தொடர்ந்து எச்சரிக்கை விடுத்த போதும், அரசாங்கம் அது குறித்து அவதானம் செலுத்தாமல் பொறுப்பற்ற வகையில் செயல்பட்டது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் சீனி வரிக்குறைப்பு, வெள்ளைப்பூண்டு இறக்குமதி, உரம் இறக்குமதி ஊடாக அரச நிதி மோசடி செய்யப்பட்டது. 2019ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற் பட்டவுடன் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டு செல்வந்த தரப்பினருக்கு வரி சலுகை வழங்கினார்,

இதனால் பல கோடி ரூபாய் வருமா னத்தை அரசாங்கம் இழந்தது, இவ்வா றான தவறான தீர்மானங்களினால் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது என் பதே உண்மை.

பொருளாதார படுகொலையாளி யான மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் நாட்டு மக்களை முழுமையாக நெருக்கடிக்குள் ளாக்கி ஓய்வூதியம் பெற்று சுகபோக மாக வாழ்கிறார்.

பொருளாதாரத்தை பாதிப்பிற்குள் ளாக்கி நாட்டு மக்களின் வாழ்க்கையை கேள்விக்குள்ளாக்கியவர்களுக்கு நிச்ச யம் தண்டனை வழங்கப்பட வேண்டும். அரச காலத்தில் வழங்கப்பட்ட தண்ட னையாவது வழங்கப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அர சாங்கம் நிச்சயம் நிவாரணம் வழங்க வேண்டும்,ஏனெனில் நாட்டு மக்களின் தவறால் பொருளாதாரம் பாதிக்கப்பட வில்லை.

யுத்தம் இல்லாத சூழ்நிலையில் வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு 410 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால் சுகாதார அமைச்சுக்கு 322 பில்லியனும்,கல்வி அமைச்சுக்கு 232 பில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டின் தற்போதைய சூழலில் எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை அரசாங்கம் விளங்கிக் கொள்ளவில்லை.

அமைச்சரவை அமைச்சுக்களின் எண்ணிக்கையை விஸ்தரிப்படுத்து வதை விடுத்து பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து அவதானம் செலுத்த வேண்டும் - என்றார். (ஐ)

## நல்லூரில்...

மக்கள் பார்வையிட முடியும்.

வட மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடத்தும் இந்த கண்காட்சி நேற்று அந்த இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக பங்கேற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் கலாநிதி நா. சண்முகலிங்கனும் சிறப்பு விருந்தினர்களாகச் சமூகச் செயல் பாட்டாளர் ம.செல்வின் இரேனிய ஸூம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விரிவுரையாளர் ச.ரவியும் கலந்து கொண்டு திறந்து வைத்தனர்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்தில் மரநடுகை மாதத்தைச் வருவதோடு, மலர்க்கண்காட்சி ஒன்றையும் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மனித...

நாணயக்கார தெரிவித்துள்ளார்.

குடிவரவு - குடியகல்வு அதிகாரி களுடனான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடந்தது. இதில், சட்டவிரோதமாக - மோசடியாக ஆட் களை வெளிநாடுகளுக்கு கடத்துபவர் களை கைது செய்ய கடுமையான நட வடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட் டது.

மேலும், இரு வாரங்களுக்கு ஒரு முறை அதிகாரிகள் கூடி ஆள்கடத்தலில் ஈடுபடுவோருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை குறித்தும் ஆராய முடிவு செய்யப்பட்டது.

இதேவேளை, வெளிநாடுகளுக்கு ஆட்களை கடத்தியவர்கள் தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணிய கத்துக்கு தகவல் கிடைத்துள்ளது. அவர்களை கைது செய்வது தொடர் பில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், ஆள் கடத்தல்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப் புணர்வு ஊட்டும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள் ளன. (ஐ)

# 11 மாதங்களில் மட்டும் 44 ரயில் தடம்புரள்வுகள்

கொழும்பு, நவ. 19

இந்த ஆண்டில் இதுவரை 44 ரயில் கள் தடம் புரண்டுள்ளன. நேற்றுமுன் தினம் இரண்டு ரயில்கள் தடம் புரண்டு விபத்துக்குள்ளாகின என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

பொத்துஹெர ரயில் நிலையம் அருகே ரயில் ஒன்று தடம் புரண்டது. மற்றைய தடம் புரள்வு பிலிமத்தலாவ புகையிரத நிலையத்துக்கு அருகில் இடம்பெற்றுள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில ரயில் பாதைகள் மற்றும் புகை யிரதங்களும் பழுதடைந்த நிலையில் காணப்படுவதாக ரயில்வே தொழிற்சங் கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இதற்குக் காரணம், நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாட்டால் ரயில்வே உதிரிப்பாகங்கள் மற்றும் புகையிரதத் திணைக்களத்துக்கு தேவையான பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை கொள்ளுப்பிட்டிக்கும் கொம்பனி வீதிக்கும் இடையிலான பாலம் உடைந்துள்ளமையால் கரை யோரப் பாதையில் புகையிரத தாமதம் தொடரலாம் என ரயில்வே திணைக் களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டையில் இருந்து வெள்ளவத்தை வரை அனைத்து ரயில் களும் ஒரே ஒரு பாதையில் மட்டுமே இயக்கப்படுகின்றன. பழுதடைந்த பாலத்தை சீரமைக்கும் பணி தொடங் கியுள்ளதால், வரும் திங்கட்கிழமை முதல் கடலோரப் பாதையில் ரயில் வழக்கம் போல் இயக்கப்படும் என ரயில்வே திணைக்களம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

# சாவகச்சேரி மகளிரின் 8 மாணவிகள் ஒவ்வாமையால் மருத்துவமனையில்!

தென்மராட்சி, நவ. 19

சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவி கள் 8 பேர் ஒவ்வாமை காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள னர்.

நேற்றுக் காலை பேருந்தில் பாட சாலைக்கு சென்ற மாணவிகள் 8 பேர், உடலில் ஏற்பட்ட ஒவ்வாமை மாற் றங்கள் ஏற்பட்டதையடுத்து சாவகச் சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க் கப்பட்டனர்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 8 மாணவிகளும் 12 வயதுடையவர்களா வர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# கடன் மறுசீரமைப்புப் பேச்சை ஒத்திவைத்துள்ளது இலங்கை!

### றொய்ட்டர்ஸ் தகவல்

கொழும்பு, நவ. 19

கடன்மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை இலங்கை ஒத்திவைத்துள்ளதாக, சர்வதேச ஊடகமான றொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு கடன்வழங்கியவர்கள் முன்வைத்துள்ள கேள்விகள் சந்தேகங்களுக்கு மத்திய வங்கியும் திறைசேரி அதிகாரிகளும் பதிலளிப்பதற்கான கால அவகாசத்தை வழங்குவதற்காக நேற்று இடம்பெற விருந்த கடன் பேச்சுவார்த்தைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 2.9 மில்லியன் டொலர் நிதி உதவியை பெறுவதற்கான இணக்கப்பாட்டினை எட்டிய பின்னர் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகளை இலங்கை செப்டம்பரில் ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சிறுவர் போஷாக்கின்மை பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு செயற்படத் தயார்!

### சந்திரிகா குமாரதுங்க தெரிவிப்பு



கொழும்பு, நவ. 19

சிறுவர்கள் எதிர் கொண்டுள்ள போஷாக்கின்மை பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அரசாங்கத்தின் பங்கு தாரராக இல்லாமல், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சேவையாக சிவில் சமூகத் தலைவர்களுடன் இணைந்து அர்ப்ப ணிப்பணிப்புடன் செயற்படத் தயாராக உள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குக்கான தேசிய கூட்டுப் பொறிமுறையின் இரண்டாவது கூட்டம் கடந்த புதன்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் (ஜனாதிபதி செயலகத்தின் உணவுப் பாதுகாப்புப் பிரிவு) சாந்தனி விஜேவர்தன ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே முன்னாள் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என்.ரணசிங்க, முன்னாள் கல்விச் செயலாளர் கலாநிதி தாரா டி மெல், தற்போது பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் அவய அமைப்பின் விஜித நாணயக்கார மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் குழு ஆகியோர் இதில் பங்குபற்றினர்.

சிறார்கள் மத்தியில் தற்போது நிலவும் போசாக்கு குறைபாடு பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியதன் அவசியத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க இதன்போது வலியுறுத்தினார்.

200 நாடுகளில் மிக மோசமான போசாக்கின்மை உள்ள பத்து நாடுகளில் இலங்கையும் தற்போது இருப்பதாகவும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 20 சதவீதத்திற்கும் அதிகமானோர் கடுமையான போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பால், முட்டை மற்றும் காய்கறிகள் உற்பத்தியை அதிகரிப்பதற்கான செயற்திட்டங்களை விரைவு படுத்துதல், வெளிநாட்டு உதவியின் அடிப்படையில் கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் குழந்தைகளுக்கான மதிய உணவுத் திட்டத்தை முறைப்படுத்துதல், உணவு வழங்குவதில் சிவில் சமூக அமைப்புகளின் பங்களிப்பை எவ்வாறு பரவலாகக் கிடைக்கச் செய்வது உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன் போது அவதானம் செலுத்தப்பட்டது.

இந்த பிரச்னைகள் குறித்து ஆராய்ந்து, அவற்றுக்கான தீர்வுகளை உடனடியாக அமுல்படுத்த இதன் போது தீர்மானிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் பங்குதாரராக இல்லாமல், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சேவையாக சிவில் சமூகத் தலைவர்களுடன் இணைந்து இந்த வேலைத்திட்டத்தின் வெற்றிக்காக அர்ப்பணிப்பணிப்புடன் செயற்படத் தயாராக உள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இதன் போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தேவை

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றின் விளம்பர பகுதியில் பணியாற்றுவதற்கு ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு :
077 311 9298, 075 313 2805

# ரணிலின் மன்னார் வருகை வளங்களை சுரண்டுவதற்கே!

### மீனவர் கூட்டுறவுச் சங்க சமாசம் சாடல்

மன்னார், நவ. 19

ஜனாதிபதியின் மன்னார் விஜயம் இங்குள்ள மக்களின் பிரச்சினைகளை அறிவதை விட மாவட்டத்தில் இருக்கின்ற வளங்களை எவ்வாறு அரசிற்கு ஏற்ற வகையில் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதிலேயே தங்கியுள்ளதாக வடமாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் பேச்சாளரும், மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாசத்தின் செயலாளருமான என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறுகையில், 'மன்னார் மாவட்டத்திற்கு எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வருகை தர உள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுடன் மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நேரடியாக தெளிவுபடுத்தும் வகையில் அவருடன் சந்திப்பை மேற்கொள்ள இருந்த சந்தர்ப்பத்தில் அவ்வாறான சந்திப்பு தவிர்க்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் மன்னார் விஜயம் இங்குள்ள மக்களின் பிரச்னையை அறிவதை விட மாவட்டத்தில் இருக்கும் வளங்களை எவ்வாறு அரசிற்கு ஏற்ற வகையில் பயன்படுத்திக் கொள்ள முடியும் அல்லது எவ்வாறு அந்த வளத்தை இன்னும் ஒருவருக்கு கையளிக்கலாம் என்ற நோக்கத்துடன் அவரது வருகை மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

குறிப்பாக மீனவ சமூகமாக எமது பிரச்னை மன்னார் மாவட்டத்தில் அதிகமாக உள்ளது. இந்திய மீனவர்களால் அழிக்கப்பட்ட வளங்களும், அவர்களினால் ஏற்படுகின்ற பிரச்சினைகளை யாரிடம் முறையிடுவது என்று தெரியவில்லை. இந்திய மீனவர்களின் வருகை, எரிபொருள் விலை யேற்றம், எரிபொருள் சீராக கிடைப்பதில்லை உள்ளிட்ட விடயங்கள் மற்றும் கிடைக்கும் எரிபொருளை வைத்து தொழில் செய்ய முடியாத அளவில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது.




2023ஆம் ஆண்டுக்கான பாதீடு நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி சமர்ப்பித்துள்ளார். குறித்த பாதீட்டில் கடல் தொழில் சார்ந்த விடயங்களுக்கு எந்த முக்கியத்துவமும் வழங்கப்படவில்லை. நன்னீர் மீன் வளர்ப்பிற்கான திட்டங்களை உருவாக்கி உள்ளார்கள். அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்கள். ஆனால் கடற்றொழில் குறித்து எந்த திட்டமும் இல்லை. அதற்கான நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே எமது சந்ததியும் கடலை நம்பி உள்ளனர். அவர்களின் வாழ்வாதாரமும் கடல் தான். எனவே மன்னார் மாவட்டத்திற்கு வருகை தர உள்ள ஜனாதிபதி அவர்கள் நடுக்குடா பகுதியில் உள்ள மீனவர்களை மட்டும் சந்திப்பதாக அறிகின்றோம். எனவே மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவ படுத்துகின்ற பல மீனவ அமைப்புகள், தலைவர்கள் உள்ள நிலையில் ஒரு சிறிய கிராமத்தில் உள்ள மீனவர்களின் பிரச்சினைகள் மட்டும் கேட்டறிவது நியாயம் இல்லை - என்றார். (அ)

## வெளிநாட்டு இனிப்பு வகைகளின் தரத்தை பரிசோதிக்கத் தீர்மானம்

கொழும்பு, நவ. 19

வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்டு பல் வேறு இடங்களில் விற்பனை செய்யப் படும் இனிப்பு வகைகளின் தரத்தை பரிசோதிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து உரிய முறையை பின்பற்றாது கொண்டுவரப் படும் இனிப்பு பண்டங்களின் தரம் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக உணவு தரம் மற்றும் பாதுகாப்பு பிரிவு தெரிவித்துள்ளது. கொள்கலன்களில் இவை நாட்டுக்கு கொண்டுவரப்படுவதில்லை என்பதால், துறைமுகம் மற்றும் விமான நிலையங்களில் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதில்லை என சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

இந்த இனிப்பு வகைகள் கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பிரதான நகரங்களில் உள்ள கடைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான இனிப்பு வகைகள் உள்ளிட்ட உணவுப் பொருட்களின் மாதிரிகளைப் பெற்று, அவற்றின் தரம் குறித்து பரிசோதனை மேற்கொள்ளவுள்ளதாக உணவு தரம் மற்றும் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.